1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 17-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 3-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## மங்கலகரமாக முடிந்த தமிழ்விழா

### விழாவுக்குத் தலைமைவகித்த திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் பேருரை

நான்காவது தமிழ்விழாவைமுன்னிட்டு யாழ்ப்பாணத்திலே சென்ற 29-ந் திகதி அதிகாலையிலிருந்தே தேர்த்திருவிழாக் காலங்களிற்போன்று சனங்கள் பரமேசுவாக்கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள அழகிய பந்தருக்குச் சென்றவண்ணமாக விருந்தார்கள். யானைஉருவத்தில் அலங்கரிக்கப்பட்ட ஒரு இரதத்தில் புராதன ஓலைச்சுவடிகள் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டன. ஊர்வலம் பந்தர்வந்துசேருமுன்னரே சனக்கூட்டத்தின்தொகை 15,000 பேருக்கு மேலாகிவிட்டது. பெருந்தொகையான பெண்மணிகளும் பிரசன்னமாயிருந்தார்கள்.

இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர். மலாயா, தென்னுபிரிக்காபோன்று தூரத்திலையிலுள்ள நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருந்தனர். ஊர்வலம் வண்ணார்பண்ணையிலிருந்து ஆரம்பமானது. தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலுமிருந்து வந்திருந்த பிரபலசங்கீதவித்துவான்கள் அடங்கிய வாத்தியகோஷ்டிகள் முன்செல்ல ஊர்வலம் இரண்டுமைல்தூரத்திலுள்ள தமிழ்விழாப் பந்தருக்குச்சென்றது.

#### விழாஆரம்பம்

திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள்தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. மேடையில் அமர்ந்திருந்த பிரமுகர்களில் யாழ்ப்பாணமேற்றிராணியாரான யகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர், மாஜிசென்னைக் கல்விமந்திரியாரான திரு. டி. எஸ். அவினுசிலிங்கம் செட்டியார், கைத்தொழில்-கடற்தொழில் மந்திரியார் திரு.ஜி.ஜி பொன்னம்பலம், கல்விமந்திரியார் திரு. கே. கனகரத்தினம், சேர் கந்தையாவைத்தியநாதன், டக்டர் கே. எஸ். கிருஷ்ணன், பாராளுமன்ற அங்கத்தினர்களான திரு.எஸ்.தொண்டமான், திரு. கே. இராஜலிங்கம், திரு. வி. நடராஜா, திரு. சி. சுந்தரலிங்கம், திரு. சி. வன்னியசிங்கம், திரு, வி. குமாரசுவாமி, செனற்றர் எஸ். ஆர். கனகநாயகம், யாழ்ப்பாணமேயர் திரு. சி. பொன்னம்பலம் ஆகியோரும் காணப்பட்டனர்.

#### வரவேற்புரை

இராமநாதன்கல்லூரி மாணவர்கள் வரவேற்புக்கீதங்கள் பாடியபிறகு வரவேற்புக் கமிற்றியின் தலைவரான திரு. சு. நடேசபிள்ளை தமதுவரவேற்புரையில் கூறியதாவது:- "இது எல்லோரும் பெருமிதங்கொள்ளக்கூடியஒரு சந்தர்ப்பமாகும். இது இலங்கைச் சரித்திரத்திலே ஈடிணையற்ற ஒருசம்பவம். இலங்கை, இந்தியா விலிருந்துமட்டுமன்றி, மலாயா, தென்னுபிரிக்காபோன்ற தூரமான நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் இவ்விழாவுக்கு வந்துள்ளார்கள். இவ்விழாவுக்குப் பிரபல இந்திய தலைவரான திரு. சி. ஆர். சீனிவாசன் தலைமைவகிப்பது எங்கள் அதிஷ்டமாகும்.

#### தமிழகச் சிறப்பு

இப்பேர்ப்பட்ட பிரமுகர்கள் அடங்கிய இக்கூட்டம் தமிழகத்தின் பண்டைப் பெருமையை மீண்டும்நிலைநாட்ட நாமெல்லோரும் திடசங்கல்பம் கொண்டுள்ளோமென்பதற்குப் போதிய சான்ருகும். தமிழர்கள் புராதனமக்களாவர். எங்கள்நாகரிகம் கிறீஸ்துவுக்குமுன் 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்கு முந்தியதாகும். எங்களுடைய கலாசாரம் தமிழ்நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் வெகுதூரம் வரை பரவியிருந்தது. இலங்கையில் தமிழரும், சிங்களவரும் எத்தனையோ நூற்ருண்டுகாலமாய் ஒன்ருகவசித்திருப்பதோடு அவர்கள் தமதுகலாசாரத்தையும் பாஸ்பரம் பரிவர்த்தனை செய்துவந்திருக்கிருர்கள் என்பதற்குச்சான்றுகளுண்டு.மொழி, சிற்பம், நிர்வாகம். பொதுஇயல் ஆதியனவும் தமிழர்களின்செல்வாக்கின்கீழ் வந்துள்ளன. கடந்தகாலத்தில் இவ்விருசமூகங்களும்ஒற்றுமையாக வாழ்ந்துவந்திருப்பதிலிருந்து தமிழையும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

#### உத்தமமனஸ்தாபம் என்ருல் என்ன?

அளவில்லாத நன்மைத்தனமுள்ளவரும், பரிபூரண இலட்சணங்களை உடையவருமான தேவனுக்குஎதிராகச் செய்துகொண்ட துரோகத்துக்காக மனசில் உண்டாகும் விதனமே உத்தம மனஸ்தாபமாகும். தேவனிலுள்ள பூரண நேசம்தான் அந்தத் துக்கத்துக்கு முகாந்திரமாகி உத்தமமனஸ்தாபத்தைஉண்டாக்கும்.

உத்தமமனஸ்தாப முயற்சி செய்வது உள்ளபடி கஷ்டமா? ஒருபோதும் கஷ்டமில்லை. அது மிகவும் இலேசானது. உத்தம மனஸ்தாபமந்திரத்தை வாயினலல்ல, முழுஇருதயத்துடனும் கருத்தாய்ச் சொல்லுதல் போதும். மனதினலே "என் தேவனே! நான்உம்மை நேசிக்கிறேன்" என்று பயபக்தியுடன்சொல்லுவதும் உத்தமமனஸ்தாபத்துக்குப்போதும்.

உத்தம மனஸ்தாபத்தினல் உண்டாகும் நன்மை என்ன? பாவசங்கீர்த்தனம் செய்யமுன்தானே அது பாவப்பொறுதியைப் பெற்றுத்தரும். அப்படியானல் உத்தமமனஸ்தாபத்தினல் பொறுதியடைந்துகொண்ட பாவங்களைப் பாவசங்கீர்த்தனத்திற் சொல்லவேண்டுமா? ஆம், பாவங்கள் எல்லாவற்றையும் குருவானவருக்கு அறிக்கையிட வேண்டும் என்பது தேவகட்டளை. ஆதலால் குருவானவர் கிட்டாதிருந்தால் அன்றி மற்றும்படி நாம் உத்தமமனஸ்தாபப்பட்டபின்பும் தேவகட்டளையை நிறைவேற்றுவதற்காகப் பாவங்களை அறிக்கையிடவேண்டும்.

#### உத்தமமனஸ்தாப முயற்சியை உனதுஉள்ளத்தில் எப்போது பிறப்பிக்கவேண்டும்?

(1) நீ சாவானபாவஞ்செய்த ஒவ்வொருமுறையும் அதனைப் பிறப்பித்தல் வேண்டும். சாவானபாவத்தினல் ஆத்துமத்தில் மகாபரிநாசம் உண்டாகின்றது. அதனல் இஷ்டப்பிரசாதத்தை இழந்துபோகிருய். பரலோகஉரிமையும், நீ ஏலவே சம்பாதித்த பெறுபேறுகளும், இனிமேல் அவற்றைச் சம்பாதிக்கக்கூடிய தகைமையும் இல்லாது ஒழிகின்றன. சாவானபாவத்துடன் சீவித்தல் அறவே பிரயோசனமற்ற சீவியம். உத்தம மனஸ்தாபத்தால வரப்பிரசாதமும், இழந்துவிட்ட பெறுபேறுகளும் எல்லாம் மீண்டும் உனக்குக் கிடைக்கின்றன. அதனல் புதியபெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியவனுகின்ருய்.

(2) நீ ஒவ்வொருஇரவிலும் நித்திரைக்குப்போகுமுன் உத்தமமனஸ்தாபமுயற்சி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதாலே நாளாவட்டத்தில் நீ கட்டிக்கொண்ட சகல சாவான பாவங்கள், அற்பபாவங்கள்எல்லாம் அழிந்துபோகின்றன. நீ ஆயத்தமில்லாமல் மரிக்கும் ஆபத்தில்நின்று அதுஉன்னைப் பாதுகாக்கின்றது. இன்று இரவுதானே நீ சாகலாம். நீ சாவானபாவத்துடன் மரித்தால் நரகத்தில்தான் கண்விழிப்பாய்.

3. **மரணஆபத்துவேளையிலும்**, நீ உத்தமமனஸ்தாபமுயற்சி செய்தல்வேண்டும். இவ்விதஆபத்து நேரிடும்பொழுது நீசாவான பாவத்துடன் இருக்கலாம். பாவசங்கீர்த்தனம்செய்ய ஒருகுருவானவர் உனக்கு இல்லாது போகலாம். இப்படிப்பட்ட வேளைகளிலே உத்தமமனஸ்தாபந்தான் இரட்சணியத்தின் ஒரேயொரு பரமவழியாகும். ஒருவேளை உன்மரணப்படுக்கையில் தேவதுரோகமான ஒரு குற்றத்தை நீ கட்டிக்கொள்ள நேரிடும். அவஸ்தைகொடுத்த குருவானவர் போய்விட்டார். சிறிதுவேளையில் உனதுநிர்ப்பாக்கியஆத்துமம் தேவநடுவரின்முன் தோற்றப்போகின்றது. இப்படிஇருப்பினும் நீ இரட்சணியம் அடையவழியுண்டா? ஆம்! ஆம்!! வழியுண்டு. உத்தமமனஸ்தாபந்தான் அந்த வழி.

ஒருகுருவானவர் தம்மைப்பற்றித்தாமே சொன்னசம்பவத்தைக் கேளுங்கள்: "இதோ! செத்தேன்என்று சொல்லக்கூடியஆபத்து எனக்குநேரிட்டது. எட்டுப்பத்துவினடிகளுக்கு அதாவது ஒருபரமண்டலமந்திரத்தில் அரைவாசி சொல்லக்கூடிய நேரத்தில் நான் செத்துப்போகக்கூடிய அவ்வளவு ஆபத்துச் சடுதியில்உண்டானது. இந்தச்சொற்பநேரத்துள் நாறு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றும் உலக மகா யுத்தம்

(சுவாமி லெத்திலியர், எஸ். ஜே.)

(முன்தொடர்ச்சி)

## முடிவுரை

1. பாத்திமாவின் விண்ணப்பங்களுக்குச் செவிசாய்க்கிறவர்களுக்கு :— செபமும்—தபமும். மாதாவின் விண்ணப்பங்களைக் கேளாது புறக்கணித்துத் தள்ளுவோரின் எண்ணிக்கை கடவுளின் கருணையைப் பெறமுடியாத அளவுக்கு மிகப்பெரிதாய் இருக்கிறது. நமது செபதபங்கள் கடவுளின் கோபாக்கினையை ஓரளவு தணிக்கும். ஒருவேளை அதைத் தடுக்கவும் கூடும். ஆனால், நமக்கும் நமது குடும்பங்களுக்கும், நமது தாய்நாட்டிற்கும் அன்னையின் மூலம் கடவுளின் கருணையைப் பெற்றளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த யுத்தத்தின்போது, பாத்திமா மாதாவின் காட்சியின் பயனாக ஏற்பட்ட விசுவாச மறுமலர்ச்சி போர்த்துக்கால் தேசத்தை அழிவினின்று காப்பாற்றியதும், சிவப்பர்களின் அட்டூழியத்தில் அழியவிருந்த ஸ்பெயின் தேசத்தை வேதசாட்சிகளின் இரத்தம் காப்பாற்றியதும் ஞாபகமிருக்கட்டும். பாத்திமாமாதாவின் விருப்பப்படி அநுதினம் செபமாலைஓதுதல், சனிக்கிழமைகளில் நன்மை பெறுதல், நம்மை முற்றிலும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்—காணிக்கையென்றால் மற்றச்செபங்களைச் சொல்லுவதுபோல் இந்தச்செபத்தையும் சொல்லிவிடுவதால் மட்டும் ஆகிவிடாது; அதை வாழ்க்கையில் உணர்த்திக்காட்ட, பாவந்தவிர்த்துக் கடவுளின் கற்பனையைச் சரிவர அனுசரிப்பதற்கு எல்லாவித முயற்சிகளும் எடுத்தாக வேண்டும். இப்படிச் செய்தால் உங்களுடைய சோதனை காலத்திலும், துன்பதுயர வேளைகளிலும் மாதா உங்கள் அருகில் இருப்பாள். உங்கள் குடும்பங்களை நிச்சயமாய்க் காப்பாற்றுவாள் என்பது உறுதி.

2. கடவுளின் கருணையை மன்றாடத் தங்களாலான எல்லாம் செய்யக் காத்திருக்கும் குருமார், கன்னியர், மற்றஅனைவர்க்கும் :-

நெருக்கடியான இவ்வேளையில், உலகத்திற்கு மிகஅவசியம் தேவையான மக்கள் நீங்களே. உங்கள் செபதபங்களைப் பெருக்குங்கள். பரிகார முயற்சிகளைப் பன்மடங்கு அதிகப்படுத்துங்கள். மகத்தான தியாகங்களுக்குக் கடவுள்உங்களைத் தெரிந்துகொள்வாரேயானால், உங்கள் உயிரைப் பலிகொடுக்க நேர்ந்தாலும்கூடப் பயப்படாதீர்கள். வீரத்தியாகிகளாய்விளங்கி, எப்படிப்பட்ட பெருந்துன்பங்களையும் சகித்துக்கொள்ளவும், வேதசாட்சிகளாக மரிக்கவும்கூட மற்றவர்களுக்குவழிகாண்பியுங்கள்.

3. திருயாத்திரைக்கன்னியுடைய வருகையின் பயனால் எடுத்த நல்லபிரதிக்கினைகளைத் தொடர்ந்து அனுஷ்டிக்காமல் விட்டுவிட்ட கத்தோலிக்கர்களுக்கு :—

நண்பர்களே! நல்லகடவுள் உங்கள் இதயக்கதவுகளை இவ்விண்ணப்பத்தின்மூலம் மீண்டும் தட்டுகிறார். திருயாத்திரைக் கன்னியுடைய வருகையின்போது அவள் மூலம் தட்டினார். நீங்கள் பதில்கொடுத்தீர்கள். இன்று மீண்டும் அதுபோலவே செய்யமாட்டீர்களா? தயக்கம் ஏற்பட்டால் தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள். மூன்றாவது, மகா யுத்தம் ஒன்றுவந்தால் அப்பொழுது உங்கள் பிள்ளைகுட்டிகளுக்கும், குடும்பத்திற்கும் கடவுளுடைய தனிப்பாதுகாப்பு எவ்வளவு தேவையாக இருக்கும். அவர்கள் பொருட்டாயினும் நீங்கள் நன்மனது கொள்ளுங்கள். இவ்விதமான பிரதிக்கினைகளில் நிலைத்துநில்லுங்கள்!

4. கம்யூனிஸ்தர்களுக்கு :—

கடவுளின் நீதிக்குச் சவால் கொடுத்ததின்மூலம் அவருடைய பயங்கரமான தண்டனைகளைக் கிளப்பிவிட நீங்கள் என்னென்ன செய்யமுடியுமோ அவ்வளவும் செய்துவிட்டீர்கள். உங்களுடைய அக்கிரமங்களையும், நீங்கள் திருச்சபையின் மீது கொண்டுள்ள 'வெறுப்பையும்' அதைஅழிக்க நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு திரிவதையும் சர்வேஸ்வரன் இன்னும் சில காலத்திற்கு உலகத்தைத் தண்டிப்பதற்கும், மக்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதற்கும் பயன்படுத்தியே கொள்ளுவார். நீங்கள் குருமார், கன்னியர்களை ஏராளமாகக் கொன்று குவிக்கலாம்; கோவில்கள், மடங்களையெல்லாம் தீயிட்டுப் பொசுக்கலாம்; வேதசாட்சிகளின் எண்ணிக்கையை இன்னும் பெருக்கலாம்; வெகு சீக்கிரத்தில் உலகத்தை ஆக்கிரமிக்கப்போவதாகக்கூடக் காட்டிக்கொள்ளலாம்; ஆனால் நீங்கள் நினையாதநேரத்திலே, எதிர்பாராத வேளையிலே கடவுளின் கரம் சாயும்........நீங்கள் நசுக்கப்படுவீர்கள்!

அப்பொழுது ருஷியா மகத்தான ஒரு கத்தோலிக்கநாடாக மீண்டும் மறுமலர்ச்சிபெறும்.... அப்பொழுது........நரகநெருப்பிலே உங்களையும், உங்கள் தவறுகளையும் சபித்துக்கொண்டு வேதனைப் புழுக்களாய்த் துடிக்கும் அவ்வேளையில், 'எங்கள் சவால் படுதோல்வி அடைந்துவிட்டது. நாங்கள் அழிக்கத் தேடியகிறீஸ்துவும், அவருடைய திருச்சபையும் வெற்றியுற்றது' என்று நீங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்!

— பொது உடைமைக் கொடிகளை ஒரு பிரேத அடக்கத்தின்போது எடுத்துச்சென்றமையால் மிலான்நகரில் ஒரு குருவானவர் அந்த அடக்கத்துக்குச் செல்ல மறுத்தார். அவரை அடித்த ஒரு தொழிலாளி [illegible] தண்டனை [illegible]




Osram
REGD. TRADE MARK

ஒஸ்றம்
அற்புதமான லாம்பு
கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.
வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.
கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லிண்டுலா.

## பொது வர்த்தமானம்

### 11 பிள்ளைகளின் தாய் மடத்துக்குத் தாயாரானார்

"கிறீஸ்துவினுடையவும், அர்ச். அந்தோனியாருடையவும் மிஷனரிய ஊழியர்கள்" என்ற கன்னியர்சபையை ஏற்படுத்தியவராகிய மேரி தெரேஸா எட்வாட்ஸ் தாயாரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக அமெரிக்காவில் 'றேக்குயெம்' பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. இவருடைய பழையபெயர் மரி எமெழனி ஒலிவியே. அமெரிக்காவில் நியூ ஆர்லியன்ஸ் மாகாணத்திலுள்ள பெரியகுடும்பங்களுள் ஒன்றில் உதித்தவர். இவர் வாலிப பருவத்திலிருக்கையில் ஓர் கன்னிகாமடத்தில் சேர விரும்பினார். ஆனால், பலவீனமான தேகமுடையவராயிருந்ததால் அவருடைய குடும்பத்தினர் அவரை மடத்திற்கு அனுப்பச் சம்மதிக்கவில்லை. 21-வது பிராயத்தில் டானியல் எட்வாட்ஸ் என்பவரை மணந்து, குடும்ப வாழ்க்கைநடத்திப் 11 பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். 59-வது பிராயத்தில் கணவனை யிழந்தார். பிறகு சான் அந்தோனியோ நகருக்குவந்தபோது, அங்கே வண. பீற்றர்பாக் என்ற குருவானவர் ஸ்பானிய பாஷை பேசும் கத்தோலிக்கரிடையே ஆற்றிவரும் சமூகசேவையைக்கண்டு, தானும் அதில்கலந்து கொண்டார். அந்தச் சுவாமியாரும் இந்தஅம்மையாரும், மேற்கூறிய கன்னிகாசபையை யேற்படுத்தினர். மேரி தெரேஸா எட்வாட்ஸ் தாயாரே இச்சபையின் முதல்தலைவியாகஇருந்து அதனை நடத்திவந்தார். இந்தஅம்மையார் குடும்பவாழ்க்கை [illegible] பெற்றெடுத்த 11 பிள்ளைகளுள் இப்பொழுது 7 பேர்களும், 20 பேரப்பிள்ளைகளும் 11 பீட்டப்பிள்ளைகளும் உயிரோடிருக்கின்றனர்.

### உடன்கட்டை ஏறினாள்

குவாலியரிலே சென்றசித்திரைமாசம் 17-ந்திகதியன்று இறந்துபோன ஒரு பிராமணனின் சடலத்தை எரிப்பதற்கு மூட்டிய சிதையில் அவனுடைய மனைவி (23 வயது) குதித்து மரணமடைந்தாள். இதைக் கண்டித்து அகிலஇந்திய மாதர் மகாநாட்டுப் பொதுக்காரியதரிசி ஸ்ரீமதி காமேஸ்வரம்மா ஒரு அறிக்கை விடுத்துள்ளார். குவாலியர் அதிகாரிகள் அதைத்தடுக்கத் தவறியதற்காக அவர்களை அவர் கண்டித்துள்ளார். அந்தப்பெண் பகிரங்கமாகவே சிதையில் குதித்தாள். "பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான சனங்கள் திரண்டுவந்து இதைக்கண்ணுற்றனர்" என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தச்செய்தி நாடெங்கும் பெரியபரபரப்பை உண்டுபண்ணியிருப்பது ஆச்சரியமல்ல. ஏனெனில், கடந்த பலவருடங்களாக உடன்கட்டையேறுவது நடைபெற்றதேயில்லை. உடன்கட்டையேறுவதை லோட் வில்லியம் பென்டிங்க் என்ற கவர்னர் ஜெனறல் சட்டவிரோதமாக்கினார். அதன் பிறகு சிலவருடங்கள் வரை மூலைமுடுக்குகளில் அபூர்வமாக உடன்கட்டையேறுவது நடந்துவந்ததுண்டு. ஆனால், இதுவிஷயமாக அதிகாரிகளுக்குத் தகவல் தெரிந்தவுடன் விதவை உடன்கட்டையேறக் காரணமாயிருந்தவர்கள், உடந்தையாயிருந்தவர்கள் முதலியோர் சட்டப்படி தண்டிக்கப்பட்டனர். எனவே, உடன்கட்டையேறும் பழக்கம் முற்றாகமறைந்தொழிந்தது. கடந்த நூறு ஆண்டுகளாக உடன்கட்டையேறுவதென்பது எங்குமே நடந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த முத்துக்கள்

ஒரு ஆங்கிலேயபிரபு தம்மனைவியுடன் பிரான்சில்வசித்துவந்தார். அவர் நல்லகத்தோலிக்கர். அவள் புரொட்டஸ்தாந்த சபையினள். அவள் கத்தோலிக்க திருச்சபையில் சேரும்படி அவர் நெடுநாளாகப் பிரார்த்தித்தும் பயன்ஏற்படவில்லை.

அமியன்ஸ்நகர்மேற்றிராணிபாரான பிரான்சீஸ்ஆண்டவர்மேல் அவளுக்கு மிகுந்த மதிப்புஉண்டு. ஒருமுறை பிரபு தமதுமனைவியை அவரிடம் அழைத்துச்சென்ருர். முதன்முறை மேற்றிராணியார் வேதகாரியங்களைப் பற்றிய பேச்சைத் தொடங்கவில்லை. அவள்பலமுறை அவரைப்போய்ச் சந்தித்துவந்தாள். "அம்மா, நீ அனுசரித்துவரும் வேதத்தைப்பற்றி உன் மனச்சாட்சி முழுத்திருப்தியுடனிருக்கிறதா?" என ஒரு சந்திப்பின்போது அவர்கேட்டார். "வேதபுத்தகம் என் கையில் இருக்கையில் நான்எவருக்கும் பயப்படுகிறதில்லை" என அவள் பதில் அளித்தாள்.

எனினும் மேற்றிராணியாரின்வார்த்தைகள் அவள்மனதில் ஆழமாகப் பதிந்தன. தன்னுள் சிந்திக்கஆரம்பித்தாள். கத்தோலிக்க சமயத்தின் பூசைப்பலியும், உத்தரிக்கிறஸ்தலத்தைப்பற்றிய போதனையும் மாறுபாடாக அவளுக்குத்தோன்றின. அடுத்த முறை அவள் அவரைச் சந்தித்தபொழுது, "இந்தஇருபோதனைகளையும் நான் ஏற்றுக்கொள்ளமுடியாது" என்ருள்.

"அம்மா, லண்டன்நகரின் புரொட்டஸ்தாந்தசபை மேற்றிராணியாரை உனக்கு நன்ருகத் தெரியும். அவரைப்பற்றிப் புகழ்ச்சியாகப் பல முறை நீஎன்னிடம் பேசியிருக்கிருய். ஒருகாரியம் நீசெய்யவேண்டும். அவரிடம்போய் "நீங்கள் அகுஸ்தீனுரைக் கிறீஸ்துசபையின் மிகப்பெருந்தீபங்களில் ஒன்ருகக் கருதிவருகிறீர்கள். அர்ச். அகுஸ்தீன் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். அதை மரித்தோருக்காக, அதாவது இறந்துபோனதன் தாய்க்காக ஒப்புக்கொடுத்தார்என்பது பொய்என்று நீங்கள்எண்பித்தால், அமியன்ஸ்நகர் மேற்றிராணியார் புரொட்டஸ்தாந்தசபையிற் சேர்ந்துவிடுவதாகச் சொல்லுகிருர்என்று சொல்" என்ருர்.

அவர்சொன்னதைக் கடிதத்தில்எழுதி லண்டன் நகர் மேற்றிராணியாரிடம் அவள்கொடுத்துப் பதில்எழுதித்தரும்படி கேட்டாள். "ஐயோ, இவள் பொல்லாதவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாள். இவள்மனம் இனிப் பேதலிப்பது நிச்சயம். நான் என்ன சொன்னபோதிலும் இந்தப்பொல்லாப்பைத் தடுக்கமுடியாது. நான் எழுதிக்கொடுப்பேனுனல் தப்பபிப்பிராயங்களும், உபத்திரவமும் ஏற்படும்" என்று அவர் எண்ணிவிட்டார்.

பிரபுவின்மனைவி அமியன்ஸ் நகர் மேற்றிராணியாரிடம்போய்ச் சிலநாள் தியானமசெய்தபின் கத்தோலிக்கசபையிற் சேர்ந்துகொண்டாள்.

*   *

போலாந்துநாட்டின் அரசனுன முதலாவது ஹென்றியின் மனைவி ஹெட்விஜ் ஏழைகளுக்கு உதவிசெய்வதிலும், பாவிகளையும் குற்றவாளிகளையும் மீட்பதிலும் வெகுஆர்வம் கொண்டவள். அரசரிடம் சொல்லி, அநேக குற்றவாளிகளுக்கு வரவிருந்த தண்டனைகளினின்று அவர்களைக் காப்பாற்றியிருக்கிருள். அந்தக்குற்றவாளிகள் தங்கள் தீயவழிகளைவிட்டு நல்லவழியில் நடக்க அவள் ஏதுவாயிருந்தாள்.

ஒருமுறை ஒரு குற்றவாளி தூக்கிலிடப்படும்படி தீர்ப்பிடப்பட்டான். அவனுக்கு மன்னிப்பளிக்க அரசனுக்கு விருப்பமில்லை. மன்னிப்புக்கேட்டு அரசி தொந்தரவு செய்வாள் என்று அஞ்சி, அந்தக்குற்றவாளியை உடனே தூக்கிலிடும்படி உத்தரவிட்டான். அவன் கொல்லப்பட்ட சிறிதுநேரத்துக்குப்பின் ஹெட்விஜ் அரசி அரசனிடம்சென்று, குற்றவாளிக்கு மன்னிப்பளிக்கும்படி மன்ருடினுள். "ஐயோ, அவனைக் கொன்றுவிட்டார்களே! உமக்குப் பிரியமானுல் அவனுடைய சடலத்தை எடுத்துக்கொள்ளும்" என அரசன் மொழிந்தான். அதை உடனே தன்னிடம் கொண்டுவரும்படி அரசி உத்தரவிட்டாள். அது அவள் முன் வந்ததும் உயிர்பெற்று, தூக்கத்தினின்று எழுந்தவன் போல் எழும்பி நடந்தான். குற்றவாளி அரசிக்கு முன் முழந்தாளிட்டு நன்றிகூறினுன். அவள் அவனை எழுப்பி, நல்லபாவசங்கீர்த்தனம்செய்து தன்வாழ்க்கையைத் திருத்திஅமைக்க அவனுக்கு உதவிசெய்தாள்.

*   *   *

ஒரு அரசன் ஒவ்வொருநாளும் இரவில் நித்திரைக்குப் போகுமுன் வீட்டிலுள்ள எல்லாரோடும்சேர்ந்து இராச்செபம் சொல்லிவந்தான். புதிதாக வேலைக்குவந்தஒருவன் ஓரிரவுசெபங்களை வாசித்தான். "கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக" என்று எழுதப்பட்டிருந்ததை, அவன்: "கர்த்தர் அரசராகிய உங்களை ஆசீர்வதிப்பாராக" என வாசித்தான். "என்ன வாசிக்கிருய்?" என்று அரசன் கேட்டார். அரசரைப் பற்றித் தகுந்தஆசாரத்துடன்உரைக்கவில்லையென்று அந்தவேலையாள்பயந்து, "மிகமேன்மை பொருந்திய அரசராகிய உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக" என்று வாசித்தான். அரசனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது: "முட்டாள், செபங்களையெல்லாம் நீ பாழாக்கப் பார்க்கிருயா? கடவுளுக்குமுன் நீயும் நானும் யார்? 'கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக' என்று செபத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உன்னை என்று வாசிக்கவேண்டும். கடவுளுக்கு முன் நான் ஒரு அற்பபுழு!"

*   *   *

பெர்நார்துவாண் என்ற குருப்பிரசாதி இங்கிலாந்தில் புகழ்பெற்ற ஓர் பிரசங்கியார். வேல்ஸ் இளவரசனுன ஏழாம் எட்வாட், அவருடைய பிரசங்கத்தைக் கேட்க அதிகஆசை கொண்டான். "அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீங்கள் செய்யஇருக்கும் பிரசங்கத்துக்கு நான் வரலாமா? உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா?" என முன்னதாகவே இளவரசர் ஆளனுப்பிக் கேட்டார். "நான் எவ்விதம் தடைசொல்லமுடியும்?" என அந்தக்குருப்பிரசாதிமொழிந்தார். "இல்லை, அரசகுமாரனுக்குமுன் பிரசங்கிக்க நீங்கள் அஞ்சலாம் என இளவரசர் நினைத்தார்" என அந்த ஆள் சொன்னுன். "இராசாதி இராசனுக்குமுன் பிரசங்கித்து எனக்கு நல்ல பழக்கம் இருக்கிறது. ஆதலின் நான் வேறு எவர் முன்னிலையிலும் பிரசங்கிக்கப் பயப்படப்போவதில்லைஎன அரசனிடம்சொல்லி [illegible] யார் கூறினார்.

## பரிசுத்த பாத்திமாநாயகியின் திருநாள்

வவுனியா - மாமடுப் பகுதியைச் சேர்ந்தபாத்திமாநகரில்(கொச்சிமோட்டைத் தெருவிலிருந்து ஒன்றரைமைல் தூரத்திலிருக்கும்) பரிசுத்த பாத்திமா நாயகியின்ஆலயம் தொடங்கி இருவருடங்கள் கழிந்துவிட்டன. மூன்ருவது ஆண்டுவிழா இம்மாசம் 8-ந்திகதி (8-5-51) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12-ந்திகதி சனிக்கிழமை (வேஸ்பர்) மாலைஆராதனையுடனும் 13-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திவ்வியபாடற்பூசையுடனும் திருச்சுரூபசுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடையும்.

பிறசமயிகள்சூழ்ந்துள்ள இப்பதியில்பரிசுத்த பாத்திமா தாயாரின் வைக்கோல் கொட்டில்ஆலயம் பிரபலியமாய் வருவதன் முக்கியகாரணம் இவ்விடத்தில் அவஅருளிவரும் அனுக்கிரகங்களேயாம்.

**S. P. Alfred**
வவுனியா கட்டளைக்குரு



## வைகாசி 13.

பத்திமாகிரியில் வைகாசிமாதத்திலும் வருடம்முழுவதிலும் முதலிடம்வகிக்கும் 13-ந் திகதி, பாத்திமாவில் தேவதாய்அளித்த 1-ம் தரிசனதினமாகும். இத்திருநாளுக்கு ஆயத்தமாக, 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் சாயந்தரம் 7-30 மணிக்குச் செபமாலை, பிரசங்கம், ஆசீர்வாதம் என்பன நிகழும். 12-ந் திகதி சாயந்தரம் 7-30 மணிக்குத் தேவநற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பெற்றுத் திருமணித்தியாலமும் - முடிவில் மகாமேன்மைதங்கிய மேற்றிராணி ஆண்டவர்அவர்களால் சாமப்பூசையும் நிறைவேற்றப்படும்.

## ஆனி 7.

இது 1950-ம் ஆண்டு யாத்திரைக்கன்னிகை பத்திமாகிரிக்கு விஜயம்செய்த ஞாபகதினமாகும். அத்தினம் விசேடித்த ஒரு நாளாகும். அதாவது:

### நோயாளர் தினம்

அன்றுகாலை 7 மணிக்கு வியாதிக்காரருக்காக ஓர் பெரிய பாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் 4-30 மணிக்குத் தேவநற்கருணை எழுந்தேற்றம் செய்து செபமாலை சொல்லப்படும். அதன்பின் தேவநற்கருணைகொண்டு நோயாளரை ஆசீர்வதிக்கும்சடங்கு யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் நடைபெறும்.

நமது பத்திமாகிரிப் பத்திரிகையில் முன் பிரசுரித்தவற்றை மீண்டும் இங்கே விளம்பரம்செய்கின்ருேம். நோயாளரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கில் பங்குபெறவிரும்புவோர் உடனேதானே தங்கள்பெயரை, பண்டத்தரிப்புக் கட்டளைச் சுவாமியாருக்கு அனுப்புவார்களாக. இந்நோயாளர் அதி பத்திவினயமாகத் தினமும் தங்கள்செபமாலையை ஒழுங்காகச்சொல்லி, தங்கள் வருத்தத்தினுலுண்டாகும் வேதனைகளைச் சந்தோஷமாக யேசுநாதருக்கும், தேவமாதாவுக்கும் ஒப்புக்கொடுத்துத் தங்களை ஆயத்தம்செய்வார்களாக. இவர்களுடையநாமங்களைப் பாத்திமா மாதா சுரூபத்தின்முன் பிரதிஷ்டைசெய்வோம். பிற சமயத்தவர்களுடைய நாமத்தையும் நமக்கனுப்பலாம். இச்சடங்கைப் பற்றி அறியாதவர்களுக்கு அறிவித்துவிடும்படி எம் வாசகநேயர்களை வினயமாய்க் கேட்கின்ருேம்.

---

—இத்தாலியதேச பிரதமரான டேகஸ்பாறி அவர்கள் சிலதினங்களின்முன் தமதுபாரியாரோடும், தம்முடைய குடும்பத்தைச்சேர்ந்த ஏனையவர்களோடும் கோவில்சென்று திவ்விய பூசைகண்டு தமதுஎழுபதாவது பிறந்த பெருநாளை ஆரம்பித்தார். பூசை முடிந்தபின் தமதுகாரியலயஞ்சென்று வழமைபோலத் தமதுகடமைகளைப் பார்க்கத்தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

வைகாசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 4 | அர்ச். மொனிக்கம்மாள் | (சி) |
| சனி | 5 | அர்ச். 5-ம் பத்திநாதர் | (வெ) |
| ஞா | 6 | கர்த்தர் ஆரோகணத்துக்கு அடுத்த ஞாயிறு— அர்ச். அருளப்பர் | (வெ) |
| திங் | 7 | அர்ச். ஸ்தனிஸ்லாஸ் | (சி) |
| செ | 8 | அதிதூதரான அர்ச். மிக்கேல் தரிசனையான திருநாள் | (வெ) |
| புத | 9 | அர்ச். கிறகோரிநசியாஞ். | (வெ) |
| வியா | 10 | அர்ச். 40 வேதசாட்சிகள் | (சி) |

# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
வைகாசிமாதம் 3-ந் திகதி

## ஆபத்தான காலம்

"அடுத்துநிகழும் ஆறுமாதங்களுக்குள் யுத்தம்ஒன்று எழவில்லையாயின் அதன் மேல் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் எழமாட்டாது; ஏனெனில், மேலைத்தேயவல்லரசுகள் அதற்கிடையிலே எத்தகையஆக்கிரமிப்பையும் எதிர்த்துநின்று சமாளிக்கப் போதியனவாய் மேற்குஜேர்மனியிலே அமைக்க வேண்டிய ஆயுதபலங்களையெல்லாம் அமைத்தாகிவிடு"மென்று அமெரிக்கஐக்கியதேச ஏழாவது சேனையின்தலைவரான லெப்ரினன்ட் - ஜெனறல் மன்ரன்எடி என்பவர் தெரிவிக்கின்றார். அதாவது வருகிறகோடைகால இறுதிவரையில்–வருகிறஆவணி மாசம் முடிகிறவரையில் உள்ள காலம் மகாநெருக்கடியும், சங்கடமுமான காலமென்று அவர் கருதுகின்றார். இந்தக்காலமுடிவோடு தமது அதிகாரத்தின் கீழுள்ள இருஅமெரிக்க படைவகுப்புகளும் ஆறாகஅதிகரித்துவிடுமென அவர் எதிர்பார்க்கின்றார்; அப்போது மேலைத்தேய வல்லரசுகளின் படைவகுப்புகளும் முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்டனவாகிவிடும். அப்போது சென்றயுத்தத்தின் பழைய போராயுதங்களையே அதிகமாகக்கொண்டுள்ள அமெரிக்க ஏழாவதுசேனை தற்போது கோறியாவில் கையாளப்படும் புதுமாதிரியான பீரங்கிகளையும், அமெரிக்க ஐக்கிய தேசத்தில் இப்போது செய்யப்பட்டுவரும் நவீன ஆயுதங்களையும் கொண்டனவாகிவிடும். முன்னர் எப்போதிலும்பார்க்க இப்போது சோவியற் ருஷியா யுத்தபைத்திய• ஆவேசம் கொண்டு உலகின் பல்வேறு பகுதிகளிலும் அமைதியைக் கலைத்துக் குலைத்தும், எக்கருமத்திலும் ஒருமுடிபுக்கு வராமல் அளப்பிக் குழப்பியும், வாக்குவாதங்கள், கலகங்களை எழுப்பி நியாயத்தை மழுப்பியும் வருகின்றது. இந்தநிலைமையிலே கோறியாவில் என்னநிகழும்? அதிலே சீனக்கம்யூனிஸ்தர்கள் அப்படியெல்லாம் பெருந்தொகை உயிர்களைப் பலிகொடுக்க ருஷியா எவ்வளவு காலத்துக்குத் தூண்டிக்கொண்டிருக்கும்? சீனக்கம்யூனிஸ்த தலைவரான மாவோ–ரிசி–ரங் என்பவருக்கு எவ்வளவு காலத்துக்கு ஆயுதங்கள் உதவிக்கொண்டிருக்கும்? கோறியாப்போர் எவ்வளவு காலத்துக்கு நடந்துகொண்டிருக்கும் என்ற கேள்விக்கு அடுத்த கோடைகாலம் ஏறக்குறைய நிச்சயமாக மாறளிக்குமென்று திரு. ஜே. ஜே. ஜில்பேட் என்பவர் பகருகின்றார்.

## எக்காலும் மாறாத அன்பர்

( Rene Bazin )

— தனிக்குருவி —

சமுத்திரத்தின் அடியில் உள்ள முத்துக்கள் கைக்கெட்டுதல்அரிது. அவைகள் அரியனவேயாம். வாஞ்சிக்கப்படத் தக்கனவேயாம். ஆனால், அவற்றிலும் ஆசை அருமைத்திரவியமாய் உள்ளவரே, எக்காலும் மாறாத, உண்மையே உருவான ஒருநண்பர்.

அப்பேர்ப்பட்டவராய் ஒரே ஒருவர் மாத்திரம் உளர். அவரை யான் அறிவேன். எனக்கு அவரே போதும். ஆ! என் அன்பான யேசுவே! எக்காலும் மாறாத, என்றுமே பிரமாணிக்கம்நிறைந்த என் நேசரே! என்னை நீர் கடிந்துகொள்ளும் போதும் அன்புமயமாகவே இருக்கின்றீர். கரைகாணாத அன்பு! நீர் என்னைத் தண்டிக்கும்போதும் உமதுகரம் மலர்போலும் மென்மையாமே. அதில்நின்று உருக்கம்நிறைந்த அருள்நீர் பெருகுவதாமே. உமது கனிந்த இருதயத்துள் மனவயிரமென்பதற்கு ஒருபோதுமே இடம்இல்லை. உமது இனிய வார்த்தைகளோ தண்ணிழற் சோலையினூடாய்வீசும் இளந்தென்றலென எனதுபுண்பட்ட இதயத்தை ஆற்றுவது. நாங்களோ, காலையிற்தோன்றி மாலையில் அழிந்துபோகும் அற்பபிராணிகள். நித்தியத்தை நாம் ஒருகனவென்றாற் போல அவமதிக்கின்றோம்.

எனது சிநேகிதரென்போர் விசுவாசகாதகர் ஆகுதல்கூடும். முற்பொழுதில் முகமன் பேசி என்னைமருட்டிய அவர்கள், பிற்பொழுதில் என்னைத்தூசிளனத் தள்ளிவிடுங்காலமும்வரும். மனவயிரம் நிறைந்த எனது சத்துராதிகள், எனக்குத் தீமைவிளைக்க விடாய்கொண்டு என்னைச் சருவுதலுங்கூடும். ஆனால், என்நேச இரட்சகரோ ஒருபோதுமே என்னைக் கைநெகிழமாட்டார். புறக்கணிக்கமாட்டார். எல்லாவற்றையும் அவர் அறிவார். ஒன்றுமே அவருடைய திருவிழிகட்கு மறைந்து பதுங்கஇயலாது. எனது மனதில்உள்ள அந்தரங்கங்கள் யாவையும், துலாம்பரமாக அவர் காண்கிறார். எனது சத்துவம் எல்லாங்கொண்டு அவருடைய நாமத்தை நான் புகழ்ந்து போற்றுகின்றேன்.

மனிததீர்வைக்கு நான் கலங்கவேமாட்டேன். அவர்களின் தீர்வை எப்பேர்ப்பட்டது? எவ்வளவாகத் [illegible] உண்மையும் [illegible]மானதீர்வைஇடுபவர், இடக்கூடியவர், எங்கள்நேசஇரட்சகர் ஒருவரேயாம். அவரே எனக்கு நிரம்பியபாக்கியம். அவரையும் என்னையும் இணைத்திருக்கும் பந்தனத்தை எவராலுமே அறுக்க இயலாது.

அவரின் அன்பை ஒருபோதுமே சுகிக்காதவர்கள், ஐயோ! அநேகர்உண்டு. அந்த அன்பின்பெருமையை எடுத்துக்கூற அவர்களால் ஐயோ! இயலாது. ஒரு முறையாகிலும், ஒரு சணப்பொழுதாகிலும்மாத்திரம் அதன் இனிமையை நீ அநுபவித்தாலோ! என்றுமேவற்றாத அந்த அருள்நீர்ச்சுனையில், ஒருமுறையாகுதல் நீ மூழ்கினாலோ! அப்படியாயின், அதன் இன்பத்தை நீ உணர்ந்தறிவாய். ஒருமுறைதானும் அந்த அமிழ்தைத் தங்கள் சீவியத்திலே அருந்தினவர்கள், ஈர்த்துத் தம்என்னை இன்பால் உருக்கிய அந்தஅனுபவத்தை, ஒருபோதுமே மறக்கமாட்டார்கள்.

**யேசுஅன்புமயம்! என்நித்தியஅன்பு!**

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணமும் மின்சாரமும்

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை மின்சார நிலையத்திலிருந்து யாழ்ப்பாண நகரசபைப் பகுதிகளுக்கு மின்சாரம்விநியோகிப்பதைக் கைத்தொழில் - கடற்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் சென்ற 1-ந் திகதி பிற்பகல் பெருந்திரளானோர் கூடிய சமுகத்தில் மின்சாரபொத்தானை அழுத்தி மின்சார நிலையத்தைத் திறந்துவைத்தார். அவ்வமயம் மந்திரியார் பேசுகையில்: "யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலுமே இருளைப்போக்கி ஒளியைக் கொண்டுவரப்போகும் இந்த மின்சார நிலையத்தைத் திறந்துவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" எனக் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: யாழ்ப்பாணநாடு முழுவதுக்கும் மின்சார விநியோகம்செய்யக் கடந்த பல மாசங்களாக நடைபெற்றுவந்த முயற்சி இப்பொழுது பூர்த்தியாகிவிட்டது. சுயஸ் பிரதேசத்துக்குக் கிழக்கேயுள்ள மிகப் பெரிய டீஸல் மின்சாரநிலையம் இது வென்று தெரிவிக்கப்படுகிறது.

### வைத்திய - சுகாதாரச் செலவு

சுகாதார-ஸ்தலஸ்தாபன மந்திரியார் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகஅவர்கள் 1951—52-ம் வருடங்களின் சுகாதாரபகுதிச் செலவுக்காக மந்திரிசபையிடம் 12 கோடியே 60 லட்சம் ரூபா கேட்கவிருக்கின்றார். 1950—51-ம் வருட உத்தேசச் செலவைவிட இந்தத்தொகை 1 கோடியே 70 லட்சம் ரூபாவால் அதிகமாகும். 12 கோடியே 60 லட்சம் ரூபாவில் சுகாதாரஅபிவிருத்தித் திட்டங்களுக்கென மந்திரியார் 10 கோடிரூபா ஒதுக்கியிருக்கிறார். வைத்திய - சுகாதாரச்செலவுக்கெனச் சென்றவருடத்தைவிடச் சுமார் 2 கோடியே 30 லட்சம்ரூபா அதிகமாகஒதுக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் உணவு, மருந்து, ஆஸ்பத்திரிகள் ஆகியவைகளின் செலவினங்களே பிரதானமாகும். வைத்திய உத்தியோகஸ்தர்களின் சம்பளச்செலவுகளும் அதிகரித்துள்ளன. ஆஸ்பத்திரிக் கட்டிடங்களுக்காக மொத்தம் 90 லட்சம்ரூபா செலவிடப்படும். இரத்தினபுரி ஆஸ்பத்திரியைப் பூர்த்திசெய்வதற்காகவும் பண்டாரவளை, கேகாலை ஆகிய பட்டினங்களில் புதியஆஸ்பத்திரிகள் கட்டுவதற் [illegible] தொகை செலவு செய்யப்படும். மஹரகமையில் நவீன புற்றுநோய் வைத்தியசாலையொன்று அமைக்கப்படும். நோயாளிகளின் உணவு விநியோகத்திற்காக அதிகமானபணம் ஒதுக்கவேண்டுமென மந்திரியார் கேட்டுக்கொண்டிருக்கிறார். மருந்துகள் தருவிப்பதற்கும் விசேஷ கவனம் செலுத்தப்படும்.

### 200 ரூபா அபராதம்

ஒருறாத்தல் கோதுமைமாவின் ஆகக்கூடுதலான கட்டுப்பாட்டுச் சில்லறைவிலை 23 சதமாக இருக்க, அதை 28 சதமாக விற்றதற்காக வேகந்த ரோடையைச்சேர்ந்த ஜே. புகாரி என்பவர்மீது தொடரப்பட்ட குற்றச்சாட்டில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் கொழும்புப் பிரதமநீதிபதி எதிரிக்கு 200 ரூபா அபராதம் விதித்தார்.

### இந்தோசீன அரிசி

பர்மாவிலுள்ள இலங்கை அரசினரின் பிரதிநிதியான திரு. ஸ்ரீ சுசந்தா டி பொன்சேக்காஅவர்கள் சுமார் 50,000 தொன் அரிசி இலங்கைக்குக் கொடுக்கமுடியுமாவென்பதுபற்றி இந்தோசீன அரசினரிடம் கேட்டிருக்கிறாரெனத் தெரியவருகிறது. இது சம்பந்தமாக அவருடைய அறிக்கையை இலங்கை உணவுஅதிகாரிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களென அறியக்கிடக்கின்றது.

### 500 ரூபா அபராதம்

கொலன்னாவரோடை வாசியான பி. ஆர்தர் பெரேரா என்பவர் தமக்கோ அல்லது தமது குடும்பத்தினருக்கோ சொந்தமல்லாத 27 அரிசிக்கூப்பன் புத்தகங்களைத் தம்வசம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் கொழும்புப் பிரதம நீதிபதி அவருக்கு 500 ரூபா அபராதம் விதித்தார்.

### 110 வயது ஸ்திரி

கிரிமெனிக்காஎன்ற ஒருகண்டிச் சிங்களஸ்திரி நாவலப்பிட்டியில் வாகவைஎன்ற இடத்திலுள்ள தமதுவீட்டில் சென்றவாரம் காலமானார். இவருக்குவயது 110 எனக் கூறப்படுகிறது. இவருக்குப் 11 பிள்ளைகளும் அநேகம்பேரன், பூட்டப்பிள்ளைகளும் உண்டு. இவரதுகணவர் 20 வருடங்களுக்குமுன்னரே காலமாகிவிட்டார்.

### சிறுத்தைப்புலி

நாளந்தா அணைக்கட்டுவழியாக நடந்துசென்ற ஒருகிராமவாசி சிறுத்தைப்புலிஒன்றினால் தாக்கப்பட்டதன் காரணமாகத் தலையில் காயங்களுடன் மாத்தளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இதன்பின் இன்னொருவர் அப்புலியின் அடிச்சுவடுகள் மூலம் அதன் இருப்பிடத்தைக் காணச்சென்றார். அவர் அம்மிருகத்தைக்கண்டு சுடுவதற்குமுன்பாக அது அவர்மீது பாய்ந்து முகத்திலும் கால்கையிலும் நகங்களாற் கீறிவிட்டது. இந்தஇரண்டாவதுஆளும் இப்போது ஆஸ்பத்திரியிலிருக்கிறார். முடிவில் சிலர் கூட்டமாகச்சேர்ந்து புலியின் குகைக்குச் சென்று "டைனமெட்" வெடிமூலம் அதைக்கொன்றனர். புலியின் நீளம் எட்டடியாகும்.

### உணவுக் கப்பல்கள்

கொழும்புத் துறைமுகத்திலுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்காக உணவுக்கட்டுப்பாட்டுப்பகுதி உணவுக் கப்பல்களைக் காலி, காங்கேசன்துறைத் துறைமுகங்களுக்கு அனுப்புகின்றது. எல்லாக்கப்பல்களும்சேர்ந்து கொழும்பில் இறக்கக்கூடிய உணவுப்பொருட்களிலும்பார்க்கக் குறைந்தபட்சம் 1,000 தொன் அதிகமாக இப் புதிய ஏற்பாட்டினால் தற்பொழுது இறக்க முடியுமென்று உணவுக்கட்டுப்பாட்டுத் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் கூறுகின்றார். சுமார் 5,000 தொன் அரிசி பர்மாவிலிருந்து இம்மாதம் வந்துசேருமென உணவுக் கட்டுப்பாட்டுஅதிகாரி திரு. எம். எல். டி. கஸ்போஸ்அவர்கள் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

[ தனிநாயக அடிகள், M. A ; M. Litt ; S. T. D. ]

ஐயன்மீர் !

தமிழன்பர் திரள்மிகுந்த இத்தனிப்பெரும் பேரவையின் தலைவர்க்கும், சிற்றுரை நிகழ்த்தும் சிறப்புப்பேறு அளித்து என்னை இங்கு வரவழைத்த "தமிழ்த்திருநாள்" குழுவினர்க்கும், இங்கிருக்கும் ஏனையோர்க்கும் என் வணக்கம் !

யான் ஒரு சொற்பொழிவாளனோ, அன்றி ஓர் எழுத்தாளனோ அல்லன். ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வம்மிக்க மாணாக்கனே ஆவன். எனவே, தமிழறிவிற்சிறந்த பெரியார் பலர் கூடியஇப்பேரவையிலே உரை நிகழ்த்துவதற்கு அதுவும் "சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள்"பற்றி உரைநிகழ்த்துவதற்கு அஞ்சுகின்றேன். ஆயினும் இங்குள்ளோர் எவரினும் தமிழன்பிலோ, தமிழார்வத்திலோ ஒருசிறிதும் குறைந்தவனல்லன் என்ற ஒரு தவறான நம்பிக்கைபற்றியே இச்சிறிய என் புன்சொல்கூற முன்வந்தேன்.

தொல்காப்பியரது நூலுக்குப் பாயிரம் எழுதப்போந்த ஆசிரியர்,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்உலகம்" —

என ஈழநாடென்பதும் இன் தமிழ் நாடென்பதை முற்றும் மறந்து 'தமிழகஎல்லை' வகுத்தோதியொழிந்தார். பண்டு தொட்டு ஒன்றாயிருந்த தமிழ்நாடு பற்பல கடல்கோள்களின் பின் இரண்டுபடவே இன்று ஈழநாடு ஏனைத் தமிழகத்தினின்றும் துணிப்புண்டுதனித்ததோர் நாடென்னும்படியாயிற்று. எனினும் தமிழ்த்தாயின் தவப்புதல்வரே ஈண்டுமுளராதலின் இவ் ஈழ எழில்நாட்டை இந்திய தமிழ் நாட்டுடன் என்றும் இணைக்கும் பாலம்ஒன்று இருந்தே வந்துள்ளது. பண்டு அநுமானுதியோர் அமைத்தனர். அழகிய கருங்கற்பாலம். இன்று நாமனைவரும் இத்துணைத் திரளாய்க் கூடிஅமைக்கும் புதிய 'கலைப்பாலம்' போற் பெருமையும், வன்மையும் பெற்றபாலம் பிறிதொன்றும் உண்டோ? இக்கவின்கலைப் பாலத்தை நிறுவ முன்வந்துள்ள பெரியார் பலருடன் யானும் சேதுஅணைக்குதவிய சிறுஅணிலேபோலும், சேர்ந்து, சங்கஇலக்கியத் தண்கடல்மூழ்கி, ஆராய்ச்சித் துறையெனும் அழகியகரையின் அருமணலிலேபுரண்டு, அரிதாய் என்மீதொட்டிய சிறுமணல் மணிகளைச் சிதறிஎறியும் சிறுதொண்டினைச் செய்துமகிழவிழைந்தேனேயன்றி வேறல்ல.

ஐக்கிய அமெரிக்கநாடுகளில் சென்றஆண்டு யான் தமிழின் பெருமைபற்றிய விரிவுரைகள் பல நிகழ்த்தும் வாய்ப்புப் பெற்றேன். அக்காலை, தமிழின் தொன்மையைப்பற்றி யான் குறிப்பிடுந்தோறும் அமெரிக்க மக்கள் அடைந்தவியப்பிற் களவில்லை. ஐக்கிய அமெரிக்கா—இக்காலநாடு; இடங்களோ, பொருட்களோ ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளே பழமையுடையன வாயினும் அவை அமெரிக்கருக்குக் களிப்பேருவகையூட்டும் பெரும்பழமைப் பொருட்களாய்த் தோன்றுகின்றன. இத்தகைய மனப்பான்மை மிகுந்து காணும் நாட்டிலே நானூறு, ஐநூறு அல்ல, நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் நிலவியிருந்ததாக நிலைநாட்டப் பட்டுள்ள நமது "சிந்துவெளி நாகரிக"த்தைப்பற்றியும், நாம் இன்று பொன்னேபோல்போற்றும் தொன்னூலான தொல்காப்பியத்தைப்பற்றியும், சங்க இலக்கியங்களைப்பற்றியும் நான் கூறியபொழுது அங்குள்ளோர் அடைந்த வியப்பினை நான் என்னென்றுரைப்பேன் ?

"தொன்மையவாம் எனும்
எவையும் நன்றாகா ;
இன்று தோன்றிய நூல்
எனும் எவையும் தீதாகா"

என்ற தமிழ்ப்புலவர் திருவாக்கு உண்மையாயினும் உலகஇலக்கிய வரலாற்றில், இலக்கிய தொன்மையிலிருந்து பல்லாயிர ஆண்டுகளாகப் பண்பாட்டுயர்வும், கலைவளர்ச்சியும், கலைச்சிறப்பும் ஒப்பற்றமுறையில் நிகழ்ந்தமைந்து கிடந்ததென்று காட்டப்படுமாயின் அத்தொன்மை இலக்கியத்தின்பெருமைக்கு ஓர்உண்மைச்சான்று என்பதை மறுத்தற்கியலுமோ? "வெர்ஜில்"என்னும் பெருமைவாய்ந்த இலத்தீன் புலவரை என் இரு கரங்களில் எடுத்து ஏந்திப் படித்து மகிழ்ந்துள்ளேன். எகிப்துநாட்டின் தொன்மை வாய்ந்த ஏடுகளையும், எகிப்து நாகரிகத்தின் எழில் வாய்ந்த பழம்பெரும் சின்னங்களான பொருள்கள் பலவற்றையும் புரட்டிப்பார்த்து வியந்துள்ளேன். நடுஅமெரிக்கர், தென் அமெரிக்கரது "இன்கா" "அஸ்தெக்" பண்பாட்டின் அரிய அறிகுறிகளான கோட்டைகளையும், கட்டிடங்களையும் கண்ணாரக் கண்டு களித்துள்ளேன். எனினும் தொல்காப்பியரை என்கைகளில் ஏந்திவிரிக்கும்பொழுது எனக்குஏற்படும் உள்ளக்கிளர்ச்சிக்கு ஈடாக வேறெந்த நூலாலும் ஏற்படுவதில்லை என்பது உண்மை. ஒவ்வொரு தமிழனும் இவ்வுணர்ச்சிப்பெருக்கும், உள்ளக்கிளர்ச்சியும் பெறுவதில் வியத்தற்குரியது ஒன்றுமில்லை. நம்பண்டைத் தமிழ் நூல்களைத் தொட்டதும் பல்லாயிர ஆண்டுகளாக நிகழ்ந்து பண்பட்டுத் திருந்திய இலக்கிய -இலக்கணப் பயிற்சி நம்மனக்கண்முன் நிழற்படம்போல் எழுந்து நிற்பதே இதற்குக் காரணம்.

நாம் இருப்பது இப்பெரும் ஞாலத்தின் ஒருசிறுமூலை. இக்கடைகோடியின் கண்ணே இத்துணைசிறந்த நாகரிகமும், வளமார்ந்த இலக்கியமும் தோன்றி வளர்ந்து செழித்து விளங்கும் உண்மையைச் சிலவேளைகளில் நாமே நம்புவதற்கியலாது போகின்றது. வானுறவோங்கி வளந்தரும் இப்பனைமரத் தோப்புகளின் சூழ்நிலையில் உலகிற்சிறந்த இலக்கியமொன்று இடம் பெற்று எழுந்து வளர்ந்து உருவாயிற்று என்று நம்புவது எளிதன்று; இது மிகைபடக்கூறுதல் உயர்வு நவிற்சி என்று இகழ்ந் தொதுக்குவாருமுளர். எனினும், நடுவுநிலைமை என்பதினின்றும் பெரிதும் வழுவினோரே தமிழுக்குஉரிய சிறப்புரிமைகளைத் தடையின்றி ஏற்கமறுப்பர்! எமது இந்தஈழநாட்டுநிலையையே பார்மின்! வேற்று மொழியினரும், வேற்றுநாட்டவரும் இக்கடல்சூழ் இலங்கையிற் கால்வைக்குமுன்னரே, தமிழர் இங்குவாழ்ந்தனர்; தமிழ்மொழி இங்குபரவிப்பண்பட்டுநின்றது. ஆயினும், இன்று எழுதிக் குவிக்கப்பெறும் எண்ணற்ற "வரலாறு"களை யெல்லாம் பார்த்தால், தமிழர் பிற்காலத்தில் குடியேறிய மக்களென்றே கூறி வருகின்றன.

இந்திய வரலாற்று நூல்களை எடுத்துப் பார்மின் ! Discovery of India, History of India—என்றெல்லாம் பலபடப்புனைந்து வெளிவரும் அறிஞர் பலரின் ஆராய்ச்சி நூல்களையெல்லாம் படித்துப் பார்மின் ! மாக்ஸ் முல்லர் (Max Muller) வின்ற்றர்னிட்ஸ் (Winternitz) போன்றவர் முதலாய் வடமொழி இலக்கியத்தின் பெருமையையேவிரித்துக்கூறுவர். அவ்இந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே, தமிழ் இலக்கியத்தைப்பற்றியோ திராவிட நாகரிகத்தைப்பற்றியோ ஒரு சொல்லேனும் இல்லை. ஒருகுறிப்பேனும் கருத்தேனும் இல்லை. இந்தியப்பண்பு, இந்தியநாகரிகம் இந்தியக் கலைகள், இந்தியமொழிகள் எல்லாம் திராவிடப்பண்பு, திராவிடநாகரிகம், திராவிடக்கலைகள், திராவிட மொழிகள் — இவற்றை அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும், பல்லாண்டுகளாக, இவ்வுண்மையை மறைத்தும், ஒழித்தும் நடுநிலைமையற்ற ஆராய்ச்சியாளர்கள் நூல்களை யாத்ததால் இன்று இவ்வுண்மையை எடுத்துக்கூறுவதே மக்கள் மனதில் ஐயம்விளைவிப்பதாக உள்ளது; அங்ஙனம் எடுத்துக்கூறத்தானும் பெரிதும் மனத்துணிவு வேண்டற்பாலதாயிற்று. தமிழராகிய நாமும் தான் என்னை? நம் இந்தியமொழிகளிலேகூட நம் தமிழைப்பற்றிய உண்மைகளைக் கூறினோம் அல்லேம். நாமே பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு "வாழ்ந்து" வந்துள்ளோம். இத்தமிழ்க் கோயிலில் நிகழும் "தமிழ்த்திருநாள்"—உலகில், தமிழன் பெருமையையும், தமிழின் பெருமையையும் நிலைநாட்டும் புதியதோர் இயக்கத்தை உண்டாக்குமாயின் நாமனைவரும் நமக்குத்தானே நன்மை பலபயக்கும் நற்றொண்டினைச் செய்தவர்களாவோம்.

(தொடரும்)

கர்த். பர. ஆரோக. திருநாளின்

## பின்வரும் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

( அரு. 15: 26, 27 & 16: 1—4)

அக்காலத்தில் யேசுநாதர் தமது சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: பிதாவினிடத்தினின்று நான் உங்களுக்கு அனுப்பவிருக்கிறவரும், பிதாவினிடத்தினின்று புறப்படுகிற சத்தியத்தின் இஸ்பிரீத்து சாந்துவானவருமாகிய தேற்றுகிறவர் வரும்போது என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுவார். நீங்களும் துவக்கமுதல் என்னோடிக்கிறதினால் சாட்சிசொல்லுவீர்கள். நீங்கள் இடறல்படாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உங்களைச் செபக்கூடங்களுக்குப் புறம் பாக்குவார்கள். அன்றியும் உங்களைக் கொலைசெய்கிற எவனும் தான் சர்வேசுரனைச் சேவிக்கிறதாக நினைக்குங்காலம் வருகின்றது. பிதாவையும் என்னையும் அவர்கள் அறியாததினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். ஆனால் அந்நேரம் வரும்போது, நான் இவைகளை உங்களுக்கு வசனித்தேன் என்று நீங்கள் நினைத்துக்கொள்ளும்பொருட்டு இவைகளை உங்களுக்குச்சொன்னேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

## ஊதாரிப்பிள்ளை

(1 பக்கத் தொடர்ச்சி)

யிரம்எண்ணங்கள் என்மனதில் உதித்தன. நான்நம்பமுடியாத விரைவில் எனதுசீவியகாலச் சம்பவங்கள்எல்லாம் என்மனக் கண்முன் தோற்றின. அத்துடன் நான்மரித்தபின் எனக்குச்சம்பவிப்பது என்னஎன்ற எண்ணம் என்னைவலிமையுடன் அருட்டிக்கொண்டிருந்தது. நான் மீண்டும்சொல்லுகிறேன். இவையெல்லாம் ஒருபரமண்டல மந்திரத்திலே அரைவாசிசொல்லும்நேரத்துள் நிகழ்ந்தன. தேவஇரக்கத்தால் சாகாது தப்பிக்கொண்டேன். நான் ஒரு சிறியநூலை எழுதி வெளியிடும்படி தேவன்சித்தமானார்.

எனதுஆபத்துவேளையில் நான் செய்தமுதற்காரியம், எங்கள்ஞானோபதேசக்குறிப்பிடப் படிப்பனை தான். அதாவது தாமதமில்லாதுஉத்தமமனஸ்தாப முயற்சிசெய்து தேவஇரக்கத்தையும், பாதுகாவலையும் வேண்டினேன். உண்மையாகவே அந்த ஆபத்துவேளையிற்றான் உத்தமமனஸ்தாபத்தைநேசிக்கவும், மதிக்கவும்படித்துக்கொண்டேன். அதன்பின் தருணம் வாய்க்கும்போதெல்லாம் பிறருக்கும் அதைப்படிப்பித்துப் பிறரும் அதனை மதிக்கும்படி இயன்றளவு பிரயாசைப்பட்டு யருகிறேன்.

(தொடரும்)

—இன்று அமெரிக்க இல்லங்களில் 100-க்கு 95 வீடுகளில் ரேடியோ செற்றுகள் இருக்கின்றன. அந்நாட்டில் உள்ள செற்றுகளின் மொத்த எண்ணிக்கை ஒன்பது கோடி. இந்தியாவில் தற்சமயம் 5,44,250 செற்றுகளே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நான்காவது தமிழ்த்திருவிழா யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது. தமிழ் வளர்ச்சிக்கழகம் தமிழ்மொழியின் முன்னேற்றத்துக்கு ஆற்றிவரும் சேவையையும், தமிழ்விழா நடத்தப்பெறுவதின் நோக்கத்தையும் பற்றித் தமிழ்த்திருவிழா நிர்வாகசபையினர் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர்:—

உயர்ந்தகவிதை வளம்நிறைந்தது நம் தாய்மொழியாகிய தமிழ். தெய்வத்தமிழ்க் கவிதை மற்றமொழிக் கவிதைகளோடு சரிநிகர் சமானமான நிலையிலும் அதற்கு மேலாகவும் வைத்து எண்ணக்கூடிய பெருமைவாய்ந்தது. இந்தவகையிலே நாம் நல்லஅதிர்ஷ்டம் உடையவர்கள். தமிழ்மொழியின் சிறப்பிற்குக் காரணம் முக்கியமாக அதன் கவிதைஎன்றே கூறும்படி அவ்வளவு சிறந்தகவிதையை நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் எந்தமொழியின் வளர்ச்சிக்கும் கவிதைமட்டும் போதாது. இக்காலத்திலே ஒரு மொழியானது அதைப்பேசும் மக்களுக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமானால் அதிலே எல்லாக் கலைகளிலும் சிறந்த நூல்கள் இருக்கவேண்டும். விஞ்ஞானம், மனத்தத்துவம் என்றிப்படிப்பட்ட பலவகையான அறிவியல் துறைகளிலும் உரைநடை நூல்கள் நூற்றுக்கணக்காக வெளியாகவேண்டும். அவ்வாறு நூல்கள் வெளியாவதற்கு ஊக்கம்அளிக்கும் முக்கியநோக்கத்தோடு தமிழ்வளர்ச்சிக் கழகம் 1946-ம்ஆண்டு மார்கழி மாதம் 17-ம்தேதி திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களின் நன்முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்றது. எந்தத் துறையில் நல்லநூல் வெளியானாலும் அதைப் போற்றவேண்டும் என்பதும், அதை எழுதிய ஆசிரியருக்கு உற்சாகம் அளிக்கவேண்டும் என்பதும் இக்கழகத்தின் நோக்கமாகும். அதற்காக ஆண்டுதோறும் பரிசும், பரிசுப்பத்திரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்குவதற்கு நூல்கள் வெளியாகும் பலதுறைகளும் பன்னிரண்டுபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. கவிதை இசைப்பாடல். 2. கணிதம், வானநூல், பொறியியல். 3. சிறுவர் இலக்கியம். 4. வைத்தியம், சுகாதாரம். 5. கல்வி, தத்துவம், மனத்தத்துவம். 6. இயற்கைநூல் விவசாயம். 7. சிறுகதை. 8. நாவல், நாடகம். 9. ஆராய்ச்சி. 10. கட்டுரை. 11. சரித்திரம், பொருளியல், அரசியல். 12. பௌதிகம், இரசாயனம் என்பனவாகும்.

இவற்றில் முதல் ஆறு பகுதிகள் ஒரு ஆண்டிலும் மற்ற ஆறு பகுதிகள் அடுத்தஆண்டிலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே ஒரு துறையில் வெளியான நூல்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சாயத்தார்களால் ஆராயப்படுகின்றன. ஒரு பகுதியில் சிறந்ததாகக் கருதப்படும் நூலுக்கு 500 ரூபா பரிசும், பரிசுப் பத்திரமும் அளிக்கப்பெறுகின்றன. அதற்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள நூல்கள் பாராட்டுப் பத்திரங்கள் பெறுகின்றன. பரிசுத்தொகையைச் சென்னை அரசாங்கத்தார் உதவ அன்போடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பரிசும், பத்திரங்களும் வழங்குவதை நிமித்தமாகக்கொண்டு ஆண்டுதோறும் தமிழ்த் திருவிழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன. முதல் விழா பாண்டியர் தமிழ்வளர்த்த மதுரையிலும், இரண்டாவதுவிழா மனுமுறைகண்ட சோழனுடைய திருவாரூரிலும், மூன்றாவதுவிழா சேரநாட்டுடன் இயைபுடைய கோயமுத்தூரிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. ஆயிரக்கணக்காக மக்கள் அவற்றிலே கலந்துகொண்டார்கள். தமிழ்த்திருவிழா வழக்கமாக இரண்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. இலக்கியம், விஞ்ஞானம், அறிவியல் முதலிய பல்வேறு துறைகளின் அறிஞர்கள் சொற்பொழிவுகளும், மாலை நேரங்களிலே இன்னிசை, நாடகம்ஆகிய கலைநிகழ்ச்சிகளும் அதில் முக்கிய அம்சங்களாகும். திருவிழாவையொட்டி ஒரு கலைக்கண்காட்சியும் நடைபெறுகின்றது. இவ்வாறு தமிழ்த்திருவிழா ஒவ்வொருவருஷமும் மக்கள் எதிர்பார்த்திருக்கும் ஒருமுக்கிய விழாவாகிவிட்டது.

தமிழ்வளர்ச்சிக் கழகம் வேறொரு மிகமுக்கியமான பணியை மேற்கொண்டிருக்கிறது. 1947-ம வருஷம் ஆவணி மாதம் 15-ந்தேதி இந்திய சரித்திரத்திலேயே ஒருபெருமை வாய்ந்தநாளாகும். அன்றுதான் நாடு சுதந்திரமடைந்தது. அந்தநாளன்று கழகத் தலைவர் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழில் கலைக்களஞ்சியம் ஒன்று (என்சைக்கிளோப்பீடியா) தயாரிக்க வேண்டும் என்றும், அதற்கு மக்கள் உதவவேண்டுமென்றும் ஒருவேண்டுகோள் வகுத்தார்கள். மக்களும் அரசினரும் அதற்கு ஆதரவுதர முன்வந்தனர். ஆங்கிலத்திலும், மற்றமேல்நாட்டு மொழிகளிலும் சிறந்த கலைக்களஞ்சியங்கள் இருக்கின்றன. அவற்றின்மூலம் பௌதிகம், இரசாயனம் முதலிய இரசாயனத் துறைகளிலும், மற்றக்கலைத்துறைகளிலும் எளிதாக விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறான நூல்ஒன்று தமிழில் இருக்குமானால் அது தமிழ்மக்களின் அறிவுவளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின்மூலம் தயாரித்து வெளியிடத்திட்டமிட்டிருக்கும் கலைக்களஞ்சியம் பன்னிரண்டு தொகுதிகளாகச் சுமார் 9000 பக்கங்கள் கொண்டதாகஇருக்கும். அதைத் தயாரிக்க 15 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. டக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், டக்டர் கே. எஸ். கிருஷ்ணன் முதலான அறிஞர்களைக்கொண்ட பதிப்பாசிரியர் கழகம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. பலஅறிஞர்கள் வேறுவேறு துறைகளிலே கட்டுரைகள்எழுத ஏற்பாடு செய்வதற்கும், அவற்றைப் பரிசீலனை செய்வதற்கும் சுமார் 30 கமிட்டிகளில் இருந்து உதவமுன்வந்திருக்கிறார்கள். சுமார் எட்டுவருஷங்களில் கலைக்களஞ்சியத்தை உருவாக்குவதெனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கான காரியங்களைச் செய்வதற்கென சென்னைச் சர்வகலாசாலையார் தங்கள் கட்டிடத்தில் ஒருகாரியாலயம் தந்துஉதவியிருக்கிறார்கள்.


கோயமுத்தூரில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்என்ற ஒருசிறந்த கல்விஸ்தாபனம் இருக்கின்றது. நல்லமுறையில் சிறுவர்களுக்குக் கல்வியளித்தல், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், கிராமசேவைசெய்தல் முதலிய வேலைகளோடு ஆராய்ச்சிநூல்கள் வெளியிடும் பணியையும் இந்தஸ்தாபனம் மேற்கொண்டிருக்கிறது. திருக்குறளுக்கு ஒருவிரிவான ஆராய்ச்சிப்பதிப்பு வெளியிடுவதென அவர்கள் இப்பொழுது திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் தமிழ்வளர்ச்சிக்கழகம் செய்துவருகின்றது. சமீபத்திலே இந்தஆராய்ச்சிப்பதிப்பு முயற்சியை இந்தியக்குடியரசின் தலைவரான டக்டர் ராசேந்திர பிரசாத்அவர்கள் தொடக்கி வைத்தார்கள்.

இவ்வாறு தமிழ்வளர்ச்சிக் கழகம் பலதுறைகளிலே தமிழ்வளர்ச்சிக்கான சேவைகளைச் செய்து வருகிறது.

கீர்த்தி வாய்ந்த

கிறவுண் முடி அடையாளம் பதித்த மார்க் ஓடுகளையே

பாவியுங்கள்!



இவ் ஓடுகளை அழைப்பித்து விற்பவர்:

மிசெஸ் இம்மனுவேல் திருச்செல்வம்

அவர்கள் மாத்திரமே.

[முன்போல் வியாபாரம் நடந்துவருகிறது.]

விலாசம்: பெரியதெரு, யாழ்ப்பாணம்.

தந்தி: திருச்செல்வம், போன நம்பர்: 52.

## வாழ்க்கைத் துணைநலம்

"பாழ்பாழ் மடக்கொடி இல்லா மனை" என்ற பாட்டின் அடி இல்வாழ்க்கையின்சிறப்பை நன்கெடுத்துக்காட்டுகின்றது. வாழ்க்கைச்சுடரைத் தூண்டவந்துவாய்ப்பவள் தான் இல்லாள் என்ற உண்மையை எடுத்தியம்புகின்றது. வாழ்க்கைப்படகைச் செலுத்தஉதவும் துடுப்புகளில்ஒன்று மனைவி — வாழ்க்கைச்சகடத்தை இழுக்கும் எருதுக்குத்துணையாக ஒன்றிக்குமாப்போல— என்றதைவிளக்குகின்றது.

இல்வாழ்க்கைக்குத்துணையாக உள்ளவள் மனைவி. அதனாற்றான் அவள் வாழ்க்கைத்துணைவி என்றும் அழைக்கப்படுகின்றாள். பெண்மையைப்போற்றும் தமிழ்க்குலக்கவிஞர் வள்ளுவரே வாழ்க்கைக்குத்துணைவியாகிய மனைவியைக்குறித்துத் தமது நூலிலே 'வாழ்க்கைத்துணை நலம்' என்று ஓர் அதிகாரத்தை வகுத்துள்ளார். நல்லமரத்திலே புல்லுருவி முளைப்பதுபோலப் பெண்மையைப் பெருமைப்படுத்தும் தமிழர்மரபுதித்த கவிஞர்களிற் சிலர் 'பெண் மாயம்' எனவும், 'பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு' எனவும் பாடல்களைப்பாடி அதற்குத் தகுந்த கதைகளைப்புனைந்து பெண்தன்மையை இழிவுபடுத்திப் பலரும்இழிவாக எண்ணக்கூடியதாக ஆக்கி விட்டார்கள். எனினும் சிப்பிவயிற்றிலே நன்முத்து உதிப்பதைப்போல் இக்கவிஞர்கூட்டத்திற்சிலர் பெண்மையைத் தாய்மையாகப் போற்றியுள்ளனர். இல்வாழ்க்கையை — அதன் இலங்குதீபத்தைப் புகழ்ந்துள்ளார்கள். இக்கவிஞர்வரிசையில் முதன்மைபெற்றுள்ளவர் வள்ளுவரேயாவர். அவர் தமதுஒப்பற்ற நூலாகிய குறளிலே இல்வாழ்க்கை என்ற அதிகாரத்துக்கு அடுத்தபடியாக வாழ்க்கைத்துணைநலம்என்ற அதிகாரத்தைஅமைத்துள்ளார். இல்வாழ்க்கைக்குத் துணையாயுள்ள இல்லாளது நன்மையைக்கூறும் அதிகாரமே வாழ்க்கைத் துணைநலமாகும்.

1. இல்லறத்துக்கு உரிய மாண்பு உடையவளும், கணவனது வருவாய்க்குத்தக்கபடி வாழ்க்கை நடாத்துகின்றவளுமே வாழ்க்கைக்குத்துணையாவாள்.

2. இல்வாழ்க்கைக்குரிய நற்பண்புகள் மனைவியிடத்தே இல்லையாயின் ஒருவனுடையவாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதாய்இருப்பினும் அதனால் ஒருவிதபயனுமில்லை.

3. மனைவி நற்பண்புடையவளாய் இருப்பின் வாழ்க்கையில் இல்லாத பொருள் யாதொன்றுமில்லை. மனைவி நற்பண்புகள் இல்லாதவளாக இருந்தால் வாழ்க்கையில் இருக்கும்பொருள் ஒன்றுமேயில்லை.

4. கற்பென்னும் நற்பொருளுள்ள பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறொன்றுமில்லை.

5. தெய்வங்களை வணங்காது (கபடவேடதாரியாக உலாவாது) கணவனே கண்கண்ட தெய்வம்என அகமும் புறமும்ஒப்ப வழிபட்டுவாழும்பெண் பெய் என்றுகூறியபொழுதே மழைபெய்யும்.

6. தன்னைக்காத்துத் தன்கணவனைக் காத்துத் தகுதியமைந்த புகழைக்காத்துச் சோர்வில்லாமல் வாழ்பவளே பெண்ணாவாள்.

7. மனைவியைக் கணவன் கண்காணிப்பது ஒருவிதபிரயோசனத்தையும் கொடுக்காது. நிறைநின்ற கற்பினாலே பெண் தன்னைக்காத்துக்கொள்ளும் காவலே முதன்மையானது.

8. தேவருலகம் மகிழ்ச்சிநிறைந்தது எனக்கூறுவர். அந்த இன்பவாழ்வு கொண்ட கணவனைத் தொழுதுவாழும் பெண் இம்மையிலேயே அதனையடைவாள்.

9. புகழைக்காக்கவிரும்பும் மனைவியற்றவர்களுக்கு மாற்றார்முன் மிருகேந்திரனைப்போல நிமிர்ந்துநடக்கும் வீறுபெற்ற பீடுநடை ஏற்படாது.

10. மனையாளது நற்பண்புகளே மங்கலம்எனப்படும், நல்ல மக்களைப் பெறலே அதற்குஅணிகலமாகும்.

வள்ளுவரின் இக்குறள்களைக் கற்று அதன்படி நடக்கும் தோழர் தோழியரது வாழ்க்கையென்னும் தடாகத்தில் விசாரம் புகுதல்அரிது.

—பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு வருகிறஆனிமாதம் 3-ந்திகதி முத்திப்பேறுபட்டம் அருளப்படுமெனஉத்தியோகமுறையிலே வத்திக்கானில் இருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முன்னர்எதிர்பார்த்தவாறு அர்ச். பேதுருவானவர் மகாலயமைதானத்தில்அல்ல, அம்மகாலயத்தினுள்ளேயேஇத்திருவைபவம் நடந்தேறும்.

— இங்கிலாந்தில் கெண்ற் மாகாணத்தில் பாவெர்ஷம் என்ற நகருக்கு அந்நகரிலுள்ள கார்மேல்சபைக் குருமாரின் சிரேஷ்டரான வண. மூர்த்தாலின் சுவாமியாரவர்கள் மேயராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்தில் புரொட்டஸ்தாந்தஇயக்கம் ஏற்பட்டதிலிருந்து ஒரு கத்தோலிக்ககுருவானவர் நகராதிகாரியாகத்தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாநாயகி, அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர், சங். அல்போன்சா சகோதரி இவர்களின் வேண்டுதலினால் எனக்குநேர்ந்த இடையூறில்நின்று காப்பாற்றப்பெற்றேன். இவர்களது நாமங்கள் புகழப்படக்கடவது.

யாழ்ப்பாணம் அ. கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமும் கமத்தொழிலும்

### வேளாண்மை

வேளாண்மை ஓங்குவதினாலேயே நம்முடைய வாழ்க்கைஅந்தஸ்து உயரக்கூடும். பிற தொழில்கள்எல்லாம் அதனைக் கொண்டே ஆக்கம்பெறமுடியும். விவசாயம் லாபகரமற்றதென்று குறைகூறக்கூடாது. அது ஏன் தற்சமயம் லாபமற்றதாக இருக்கிறதென்றுசிந்தித்து ஏற்றபரிகாரம் தேடவேண்டும். நிலம் ஊதியத்தைத்தராமல் போகாது. ஆனால் விஞ்ஞானரீதியில் புத்தியை நுட்பமாகஉபயோகித்துப் பயிர்முறைகளை நாம்கைக்கொள்ளவேண்டும்.

கிராமங்களிலேயே சுகவாழ்க்கை இருக்கிறது. நமது மனத்திலேயே சுவர்க்கம் இருக்கிறது. இந்தத் தத்துவம் இப்பொழுது மெல்லமெல்ல விளக்கமாகிவருகிறது. மண்ணிலே இறைத்த காசைஎல்லாம் பொன்னாக்கும்வழிகள் இருக்கின்றன. அவற்றைப்பின்பற்றினால் அடிமைவாழ்க்கை ஒழியும். ஆதங்கம்தீரும். ஆரோக்கியம் நம்மைநாடும். வாழ்க்கையில் வெற்றிகைகூடும். இவைகளுக்கேற்ற சாதனங்கள்எல்லாம் கிராமங்களில்உள்ளன.

கிராமப் பாடசாலைகளிலே வேளாண்மைக்கும்,கிராமத்தின் சூழலுக்கும் ஏற்றபாடங்கள் அமையவேண்டும். அவைகளிற் படித்து வெளிவருகிறவர்கள் அப்பொழுது கிராமப்பிரியர்களாக இருப்பார்கள். நிலபுலம்களை உடையவர்கள் அவைகளை விட்டுவிட்டு, நகரங்களுக்குச் செல்லமாட்டார்கள். நகரங்களில் உள்ள பாடசாலைகளிலும் பயில்கின்றமாணவர்களுக்கு மலைகள், ஆறுகள், காடுகள்முதலிய இயற்கைக்காட்சிகளைப்பற்றியும், சந்தடியற்ற அமைதியானவாழ்க்கைபற்றியும் போதித்துவரும் பட்சத்தில் அவைகளில்பயின்று வெளிவரும் மாணவர்களில் ஒருசிலரேனும், வசதிகள் வாய்க்குமானால், நகரவாசத்தைவிரும்பாமல் கிராமங்களிற் குடியேறக்கூடும். சனத்தொகையின் விகியோகம் கிராமங்களிலும், நகரங்களிலும் வருங்காலத்தில் சரிவரஅமைய இதுஒரு யோசனையே.

நகரங்கள் நாட்டுநலத்துக்கும் நாகரிக முன்னேற்றத்துக்கும் இன்றியமையாதனவே. அதனால்அவைகள் வளர்ச்சிபெறுவதை எவரும் குறைகூறமுடியாது. ஆனால் அந்தவளர்ச்சி இயற்கையாக அமையவேண்டும். விநோதப்பொழுதுபோக்குக்காகவும், லேசானவாழ்க்கையை நடத்துவதற்காகவும், மக்கள் நகரங்களில் ஒட்டிக்கொள்வது நாட்டுநலத்துக்கு ஒவ்வாது.

கமக்காரர்ஒருவர்தன்சொந்த வயலிலேயேவீடுகட்டிக்கொண்டு தன்கமத்தைக் கண்காணித்துவரும்முறை பண்ணைவாழ்க்கை எனப்படும். குடும்பத்துக்கு வேண்டிய தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பால், விறகு முதலியயாவும் தன்நிலத்திலேயே கிடைக்கும்படி கமமுயற்சியைப் பலதுறைகளிலும் பெருக்கிக்கொள்ளுவதே பண்ணை வாழ்க்கையின் தத்துவமாகும். பண்ணைவாழ்க்கையினால் நிலம் திருந்தும். விளைவு அதிகமாகும். கமமுயற்சிகளிலே ஒன்றில்நஷ்டம்ஏற்பட்டால், மற்றொன்றில் அந்தநஷ்டத்தை ஈடுசெய்யமுடியும். எனவே, நம்நாட்டுக்கு எவ்வகையிலும் பண்ணைவாழ்க்கை சிறந்ததாகும்.

### போரும் விவசாயமும்

கிள்ளிவளவன் சங்ககாலத்துச் சிறந்த சோழவரசர்களில் ஒருவன். அவன் சிறந்தபோர்வீரன். தன்வாழ்நாளில் பெரும்பாகத்தைப் போர்களிலேயே கழித்தான். நீண்டகாலப் போர்களினால் சோழநாடு வறுமையடைந்தது. உழவர்களிற்பலர் சேனையிற்சேர்ந்து போரின்மேல் சென்றுவிட்டதால் வேளாண்மை குன்றிவிட்டது. விளைவுஇல்லாததினால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. நாட்டின்பலம் சேனைகளின் பெருக்கத்திலேதான் என்று கிள்ளிவளவன் ஆணவங்கொண்டிருந்தான். நாடு பஞ்சத்தால் கஷ்டப்படவே சேனாபலம் குறையத் தொடங்கியது. காவலன் காரணம் அறியாது கவின்றான். குடிமக்கள் மன்னனைக் குறைகூறத்தொடங்கினர். இச்சமயம் வெள்ளைக்குடிநாகனார் என்றபுலவர், "அரசர்கள் வெற்றி பெறுவதின் இரகசியம் எதனால்?" என்பதை வளவனுக்கு வற்புறுத்த எண்ணினார்.

ஒருநாள்அவர் சோழனிடம்சென்றார். சோழன் அவரைவரவேற்று, "புலவரே,ஒவ்வொருபோரிலும் நானே வெற்றியடைகிறேன்; இருந்தும் நாட்டில்பஞ்சம்; மக்களுக்கு என்மீது அன்பு குறைந்துவருகிறது; காரணம் தெரியவில்லை!" என்றான். அதற்குப் புலவர், "அரசே, என்றும்வற்றாத காவிரி பலகால்வாய்களாகப் பிரிந்து வளம்தருவதனால் பிறந்ததுஎன்று பலரும்பாராட்டும்பெருமை இந்தச்சோழநாட்டுக்கே உரியதன்றோ? இந்நாட்டில் பஞ்சம்தோன்றியதென்றால், நம் அரசன் விவசாயத்துறையில் கருத்துச்செலுத்தவில்லைஎன்று உலகம்உங்களைப் பழிக்கத்தான்செய்யும். நிலவளங்குறைந்து அரசாட்சிமெலிவடைந்து வரும்போது தாங்கள் இனிமேல் போரில்வெற்றியை எதிர்பார்த்தல் சாத்தியம்ஆகுமா?

பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே

அன்றோ!" என்றார். 'போர்செய்கின்ற படைகள் தருகின்ற வெற்றிக்குக்காரணம் உழுகிறகலப்பை ஊன்றியசால்களின்வழியே வளர்ந்துவந்த பயிர்களே' என்பது இந்தஅடிகளின்கருத்து. விவசாயம்ஓங்கினால்தான் அரசன் வெற்றிபெற்று விளங்கமுடியும்என்பதைக் கிள்ளிவளவன் அன்று உணர்ந்தான். இற்றைநாள்நடைபெறும்போர்கள் கற்பிக்கும் பாடமும் இதுவே. இதனை நம்முன்னோர்கள் இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன்பே அறிந்திருந்தார்கள்.

பாரிஎன்றசிற்றரசன்ஒருவன் இருந்தான். கொடையிலும், வீரத்திலும் சிறந்தவன் அவன். அவனுடையபுகழ் தமிழ்நாடெங்கும் பாவிவருவதைக் கேட்டுத் தமிழ்நாட்டு மூவேந்தரும் அவன்மீது பொறாமைகொண்டனர். அவனுடையபுத்திரிகள் உடலழகும், மதியழகும் படைத்தவர்கள்என்று கேள்வியுற்று வலிதில்அவர்களை வெளவிச்செல்ல எண்ணினர். இந்தக்காரணங்களினால் அவர்கள்மூவரும் பெரிய சேனை[illegible]
பறம்பு[illegible]

இந்த முற்றுகையினால் பறம்புநாட்டுக்கு வெளியிடங்களிலிருந்து உணவுப்பொருள்கள் வரவழியில்லாமற் போயிற்று. மலைநாடு ஆதலப்பற்றித் தானியங்களை அதிகமாகவிளைவிக்க வசதியற்றிருந்ததுஅது. இந்த இரகசியத்தைஅறிந்த சேர, சோழ, பாண்டியர் இன்னும் சில நாளில் பாரி எப்படியும் பணிந்துவிடுவான்; வறுமைப் பிணி வருத்தத்தொடங்கினால் பறம்புமக்கள் கலகஞ்செய்து அவனது ஆட்சியைக் குலைத்துவிடுவார்கள் என்று மனக்கோட்டைகட்டினர்.

பாரிமன்னனிடம் பல அறிஞர்கள் இருந்தனர். அவர்களுள் கபிலர்என்பவர் சிறந்தமேதாவி. முற்றுகை காலத்தில், உணவுப்பஞ்சம் நேராதபடி அவர் பல சிக்கனமுறைகளில் புதிய புதிய உணவுவகைகளைப் பெருக்கிக் கொள்ள வழிகூறினார். நீர்ப்பாசன வசதி பறம்புநாட்டிற்கு இல்லை, எனினும், சிறியசுனைகள் ஆயிரக்கணக்கில் நாடெங்கும் பரவியிருந்தன. அந்த நீரை முகந்துஊற்றிச் சிறியஅளவில் கமத்தொழில் செய்யமுடியுமென்பதை உணர்ந்துகொண்டார். அற்பமூங்கில் நெல்லையும்உபயோகிக்க வழிதேடினார். மலையில் இலகுவில்கிடைக்கும் வள்ளிக்கிழங்கைத் தேனோடுசேர்க்கும் பக்குவவகைகளைக்கண்டறிந்தார். பலாமரங்கள் அதிகமாகஇருந்தன. அவற்றின்சுளைகளையும் கொட்டைகளையும் சிறந்தஉணவுப் பதார்த்தமாக்க வழிதேடினார். பறம்புநாட்டில் உணவுப் பெருக்கம் இந்தவகைகளில் தொடங்கியது.

"அதனால் யானை, தேர், பரி, காலாள் என்ற பெரும்படையோடு வந்தீராயினும் உங்கள்முயற்சியால் பறம்புநாட்டைக் கொள்ளஇயலாது. வாளுக்கு அஞ்சிப் பாரிவேந்தன் வணங்கமாட்டான்" என்றசெய்தியை அனுப்பினார். அதன்பின் தமிழ்மன்னர் செயலற்றுத் திரும்பினார்கள்.

சங்ககாலத்திலேயே போர்ச்சமயங்களில் புதியபுதியமுறைகள் உணவு விஷயத்தில் சிருஷ்டிக்கப்பட்டபோது விஞ்ஞானம்ஓங்கியுள்ள இக்காலத்தில் அத்துறைஓங்கக்கேட்கவேண்டுமா?

பண்பாடு, நாகரிகம் என்பன அநேகமாக ஒரே பொருளைத்தரும் சொற்களாம். [illegible]த்தில் மக்கள் தங்கள் [illegible]த்துக்காக அலைந்துதிரியும் வாழ்க்கையை உடையவர்களாக இருந்தார்கள். காலம் செல்லச்செல்ல அவைகள் ஓர் இடத்தில் நிலையாகத்தங்கி வேளாண்மையைக் கைக்கொண்டார்கள். அலைவாழ்க்கைமறந்து நிலைவாழ்க்கை ஏற்பட்டதற்குப் பண்ணைகளே காரணமாக இருந்தன. பண்ணைகளின்மூலமாகவே கமத்தொழில்ஓங்கி, அதைஒட்டி மற்றத்தொழில்களும் பெருகின. மனப்பண்புக்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பண்ணைகளே காரணமாயிருப்பதினால் நாகரிகத்தைத் தமிழர் 'பண்பாடு' என்பர். நகரங்கள்தோன்றி அவற்றின்வழியாக அரசியல், பாதுகாப்பு,அமைதிமுதலியவை தோன்றியபின் மக்களின் வாழ்க்கை உயர்ந்ததைநினைத்து நகரசம்பந்தமாகத் தோன்றிய பண்பாட்டைச் சிலர் நாகரிகம் என்றனர். கிராமப்பண்பாடும், நகரப்பண்பாடும் வேறுபட்டவை. வேறுபட்டிருப்பினும் ஒன்றற்கொன்று அந்நியோந்நியமானவை. ஒன்றினால் மற்றொன்று நலமடைகிறது. —(வீரகேசரி)

---

## கண்டி
## பாத்திமா அன்னைக்குப் புதுக்கோவில்

தென்னக்கும்பராப் பாலத்திற்கு மறுபுறம் அமைந்துள்ள படிவத்தை, பரிசுத்த பாத்திமா அன்னையின் ஆலயகட்டடத்திற்கு 1951-ம்ஆண்டு வைகாசி மாதம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில், கண்டி மேற்றிராணி ஆண்டவரவர்களால் அஸ்திவாரக்கல் மந்திரிக்கப்படும்.

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மாலை 4 மணிக்கு: | பாத்திமா அன்னைக்குத் தோத்திரமாகக் கீதங்கள் பாடுதல். (விசுவாசிகள்அனைவரும் ஒன்றுசேர்ந்து கீதங்களைப் பாடுவார்களாக. அம்பிட்டியாக் கல்லூரி வாத்தியகோஷ்டி கீதங்களை இசைக்கும்.) |
| மாலை 4-30 மணிக்கு: | பாத்திமாஅன்னையின் திருச்சுரூபத்தின் வருகை. சொற்பொழிவுகள்:— ஆங்கிலத்தில் — மிகவண. பீபஸ், O.S.B. சுவாமிகள். தமிழில் — வண. பொன்னு சுவாமிகள். சிங்களத்தில் — வண. மார்க் அந்தோனி சுவாமிகள், சே. ச. |
| மாலை 5 மணிக்கு: | மகாவந். மேற்றிராணி ஆண்டவரவர்களால் அஸ்திவாரக்கல் மந்திரிக்கப்படல்; பாத்திமா அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதம். (மகாவந். மேற்றிராணி ஆண்டவரவர்களால்.) |

இவ்வைபவத்திற்கு நீவிர் விஜயம்செய்யுமாறும், பாத்திமாஅன்னை ஆலயம் கட்டுவதற்கு உதவிபுரியுமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உங்களது பொருளுதவியைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

வண. கிராசோ சுவாமி, சே. ச.
பொக்கிஷதார்,
பாப்பரசர் குருமடம்,
கண்டி.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதயத்தின் கிருபையாலும், பரிசுத்த காணிக்கைமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். எக்ஸ்பெடித்தூஸ், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். அந்தோனியார் இவர்களின் விசேஷ மன்றாட்டாலும் சுகயீனங்காரணமாகநிகழ்ந்த உத்தியோகத்தடையில்நின்று காப்பாற்றப்பட்டேன். அன்னாரின்நாமங்கள் புகழப்படக்கடவதாக.

யாழ்ப்பாணம் அ. கி.

---


## திவ்வியபூசையின் மகத்துவம்

விற்பனைக்குத்
தயாராயிருக்கின்றது.
பிரதி விலை ரூபா 2-50

## ஆண்டவர் சரித்திரம்

நமது அச்சியந்திரசாலையிலே விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

முதலாம்பாகம் பிரதி விலைசதம் 90.
இரண்டாம்பாகம் பிரதி விலைசதம் 90.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் விழா

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

சிங்களத்தையும் உத்தியோகப் பாஷைகளாக்கும் அரசாங்க கொள்கையை நிறைவேற்றுவது சாத்தியமென்றே தோன்றுகிறது.

### தமிழ் கலைக் களஞ்சியம்

தமிழ்க்கலைக் களஞ்சியத்தைத் தயாரிப்பதில் திரு. அவினாசிலிங்கம்செட்டியார் காட்டியுள்ள உதாரணத்தைப் பின்பற்றி நாம் நவீனதமிழ்க் கவிதாசங்கிரகமொன்றையும், தமிழ்மொழி, தமிழ் இலக்கியத்தைப்பற்றி ஒரு சவிஸ்தாரமான வரலாற்றையும், கேம்பிறிட்ஜ் இங்கிலாந்துச்சரித்திரத்தின் அடிப்படையில் தமிழர்களின் சரித்திரம் ஒன்றையும் வெளியிடவேண்டும்.

தமிழ்விழாவுக்குத் தலைமை வகித்த திரு. சி. ஆர். சீனிவாசன் தமதுதலைமையுரையில் தாம்பாடசாலையில்படித்தகாலத்தில் ஆங்கிலபாஷை அகிலஇந்தியாவிலும் மிகமுக்கியமான அந்தஸ்து வகித்துவந்ததென்று கூறினர். மேலும் அவர் கூறியதாவது:- "தமிழ் தினசரியான சுதேசமித்திரன்" பத்திரிகைக் காரியாலயத்தில் நான்சேர்ந்த காலத்திலேயே தமிழ்ப்பாஷைக்கு ஒருபுத்துயிர் அளிக்கப்பட்டு வருவதாகத் தோன்றியது. தேசியஆர்வங்கள் அதிகரிக்கவே தமிழ்க்கலாசாரத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பல்வேறுமுயற்சிகள் எடுக்கப்பட்டன. 1933-ம் ஆண்டுசென்னையில் நடைபெற்ற தமிழ்அன்பர்கள்மகாநாடு தமிழுக்குப் புத்துயிரளிக்க ஆரம்பமான இயக்கத்தின் நடவடிக்கைகளில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழ் அபிவிர்த்திச் சங்கம்

ஆனல், தேசியபாஷைகளுக்குப் புத்துயிரளிப்பது அரசாங்கம்அளிக்கும் ஆதரவைப் பெருவாரியாய்ப் பொறுத்ததாகும். தமிழின் மறுமலர்ச்சிஇயக்கத்திற்கு ஊக்கம்அளித்த திரு. அவினாசிலிங்கம்செட்டியார்அவர்களுக்கு நாமெல்லோரும் நன்றிசெலுத்தவேண்டும். அவர் தமிழ் அபிவிர்த்திச்சங்கத்தை ஆரம்பித்துவைத்ததற்காக நாம்அவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்தத் தமிழ்விழாவும் அச்சங்கத்தின் ஆதரவிற்தான் நடைபெறுகிறது.

### பாஷையின்நோக்கம்

நவஉலகத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும், மானிடவாழ்க்கையின் பலவிததோற்றங்களையும் எடுத்துக்காட்டும்ஒருசாதனமாகப்பாஷை இருந்துவருகிறது. நாம் நவீன விஞ்ஞானவிஷயங்களைத் தமிழ்ப்பாஷைமூலமாகவே எடுத்துக்கூறவேண்டியிருக்கிறது. தமிழ்அபிவிருத்திச்சங்கம் கலாசாரத்துறைகள் பலவற்றையும் 12 பிரிவுகளாக வகுத்திருக்கிறது. ஒவ்வொருவருடமும் ஆறுபிரிவுகளுக்குப் பரிசுகள்வழங்கப்படுகின்றன. தமிழ்ப்பாஷைக்குப் புத்துயிரளிக்கும் இயக்கத்தில் யாழ்ப்பாணமும், இலங்கைத்தமிழர்களும் பெரும்பங்குஎடுத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும். இந்தவிழா மகத்தானவெற்றியுடன் நடைபெறத்தக்கதாக நீங்கள்காட்டும் ஆதரவும், ஆர்வமும் நவீனஉலகப்பாஷைகளின் படத்தில் நமதுபாஷையைச்சேர்க்க நாங்கள்எடுக்கும் முயற்சியில் நீங்களும்சேர்ந்து ஒத்துழைப்பீர்கள் என்பதற்குப் போதியசான்றாகும்.

### எழுத்துக்கள் சீர்திருத்தம்

இறுதியிலே திரு. சீனிவாசன் பேசியபொழுது, தமிழ் எழுத்துக்களை மாற்றி அமைக்க வேண்டியதைப்பற்றி ஒருயாதாஸ்தைச் சமர்ப்பிக்கச் சென்னை அரசாங்கம் நியமித்தகமிற்றியின் அறிக்கைப்பிரசுரம்பற்றிக் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியதாவது:- "தமிழ் எழுத்தை மாற்றிஅமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறதாவென்ற கேள்விக்கு நாம் முதலாவதாகப் பதில்கூறவேண்டியிருக்கிறது. தமிழ்ப்பாஷையில் எழுத்துக்கள் பெருவாரியாய் இருப்பதின்விளைவாக அச்செழுத்துக்களைக் கோர்க்கும்வேலைமெதுவாக நடைபெறவேண்டியிருக்கிறது. ஆங்கிலபாஷையில் அச்செழுத்துக்களைக்கோர்க்க இயந்திரங்கள்இருக்கின்றனவென்பது நமக்குத்தெரியும்.

தமிழ்ச்செய்திப்பத்திரிகைகளை லட்சக்கணக்கில் அச்சடிக்க வேண்டுமானல் அச்செழுத்துக்களை நாம்மாற்றவேண்டும். அச்செழுத்துகளை மாற்றிஅமைக்கும் விபரங்களைப்பற்றி அபிப்பிராயபேதங்கள் இருக்கக்கூடும். ஆனல், நாம்எழுத்துக்களைமாற்றியேதீரவேண்டும். திடீரென்று சீர்திருத்தம்செய்வதன்மூலம் மாணவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுவதுடன் பழையசம்பிரதாயங்களைப் பின்பற்றுபவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படும்.

ஆகையால், எழுத்துக்களைப் படிப்படியாகச் சீர்திருத்தஞ்செய்ய வேண்டுமென்றயோசனையை நான் ஆதரிக்கிறேன். என்னுடையபத்திரிகாலயத்தில்தமிழ் எழுத்து அச்சடிக்கும் "லைனே" யந்திரங்கள்நிறுவப்பட்டுள்ளன. எனது தலைமைப்பிரசங்கமும் "லைனே" இயந்திரத்தின் மூலம் எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டுளது".

## மருதமடு யாத்திரை

(நவசிபி)

புத்தளத்தைச்சேர்ந்த நாக்கவி, நாவற்காடு றோமான்கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும்அடங்கிய ஒருகோஷ்டியினர் சென்ற 23-4-51 திங்கட்கிழமைகாலை 7 மணியளவில் மருதமடுத் திருச்சேத்திரத்தைத் தரிசிக்கும்நோக்கத்துடன் பகுதிப்பாடசாலைகளின் முகாமைக்காரரும், கட்டளைக்குருவுமான வண. எஸ். விசுவாசம்சுவாமியாரின்தலைமையில் பஸ்வண்டியொன்றில் பிரயாணத்தை ஆரம்பித்தனர். பத்திக்குரியபாடல்களைப் பாடிக்கொண்டும், செபமாலைஓதிக்கொண்டும் பாலாவி, புத்தளம், தப்போவை, காளாவி, கொச்சிகாமம்ஆதியஇடங்களைப் பார்த்துக்கொண்டு பகல் 11 மணியளவில் அனுராதபுரியை அடைந்தனர். பண்டைப்பெருமைவாய்ந்த அந்நகரின் பல பாகங்களையும் சுற்றிப் பார்வையிட்டபின் பகல்போசனத்தைப் புசித்துச் சற்றுஇளைப்பாறி [illegible] மீண்டும்பயணத்தை [illegible] மதவாச்சி, செட்டிகுளம்ஆதியாம் இடங்களைப் பார்த்துக்கொண்டு பிற்பகல் 4 மணிக்குக் காடி புலிவாழுங் கானகத்தின்நடுவே பரிசுத்தசெபமாலைநாயகி கிருபாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் மருதமடுத் திருப்பதியைச் சேர்ந்தனர். திருச்சேத்திரப் பரிபாலகரான வண. உக்தின்சுவாமியார் தந்துதவிய சகல சௌகரியங்களுடனுங்கூடிய இல்லத்தில் இருப்பிடவசதியை ஏற்பாடுசெய்து கொண்டனர். அங்கு திவ்வியபலி பூசையைக்கண்டும், திருச்செபமாலை ஓதியும், செபதபங்கள்செய்தும், மாதாவின்மகிமைகளை மனமாரவாழ்த்திப் பாடியும், தாயாரின்கிருபையை இரந்து மன்றாடியும், ஆத்துமசோதனைசெய்தும், பாவசங்கீர்த்தனம்பண்ணித் தேவநற்கருணையருந்தியும், அன்னையின்சந்நிதியில் காணிக்கைகள்வைத்துப் பணிந்தும் இவைமுதலியனபல பத்திக்கிருத்தியங்களைச்செய்ததுடன், ஓய்வான வேளைகளில் நிறைந்து வழிந்துகொண்டிருந்த மருதமடு நன்னீர்த்தடாகத்தில் நீந்திவிளையாடி ஸ்நானஞ்செய்தும் கோவில்வட்டாரத்தைச் சுற்றிப் பார்வையிட்டு இயற்கைக்காட்சிகளை ரசித்தும் இருதினங்களைப் பத்திவிநயத்துடனும், குதூகலத்துடனும் கழித்தனர். 25-ந்திகதி புதன்கிழமை காலைப்பூசை முடிந்ததும் தேவதாயாரை வேண்டுதல் செய்துகொண்டும், திருச்சேத்திரப் பரிபாலகர்க்கு நன்றி கூறிக்கொண்டும் திரும்பப் பிரயாணத்தை ஆரம்பித்தனர். பகல் 12 மணியளவில் காளாவி அர்ச். லூர்துநாயகி தேவாலயத்தண்டைவந்து தரித்துச் செபத்தியானங்கள் செய்தபின்னர் அவ்விடத்திலே ரம்மியமாக ஓடிக்கொண்டிருக்கும் "கலாஓயா" நதியில் ஸ்நானஞ்செய்து பகற்போசனத்தையுண்டு சிறிதுநேரம்இளைப்பாறி மீண்டும் பிற்பகல் 4 மணிக்குப் பிரயாணத்தைத்தொடர்ந்து 6 மணியளவில் தத்தம்சொந்தஊர்களை வந்தடைந்தனர். பக்திக்கும் பரமானந்தத்திற்கும் உரிய இம்மருதமடுயாத்திரையை நினையாப்பிரகாரமாக ஏற்பாடுசெய்தும், பிரயாணவசதி, போசனவசதி, மற்றும் சௌகரியங்கள்யாவையும் இலவசமாய்ச் செய்துதவியும், எம்மகிழ்ச்சிகளில் பங்குபற்றியும், அன்பு ஆதரவுடன் நடந்தும்வந்த கட்டளைக்குருவானவர் வண. எஸ். விசுவாசம் சுவாமியார்க்கும், அவருடன் யாத்திரையில்பங்குபற்றி உதவிகள்செய்த புத்தளம் உதவிக்கட்டளைக்குரவரான வண. ஏ. அன்ரனிசுவாமியாரவர்க்கும் எமதுஇருதயபூர்வமான நன்றியறிதலைச் சமர்ப்பித்துக்கொள்ளுகின்றோம். மருதமடுச்செபமாலைநாயகியின் அருள்மாரி அனைவர்மேலும் பொழிவதாக!

— கடிதர்


யாழ்ப்பாணம்

### அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்ட

## கத்தோலிக்க பிரசுரங்கள்

| | |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் .... .... .... | 15 |
| பெரிய குறிப்பிடம் (அச்சில்) .... .... | |
| மெய்விவாகக் குறிப்பிடம் .... .... | 25 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் .... .... | 05 |
| ஞானேபதேச பாடத்திட்டம் .... .... | 90 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் .... | 50 |
| மோட்சபாதை (அச்சில்) .... .... .... | |
| செபச் செண்டு .... .... .... | 75 |
| திவ்விய பூசைப்பலியின்பேரில் தியானங்கள் .... | 1-00 |
| பசாம் .... .... .... .... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) .... | 6-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமில்லாமல்) .... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் (அச்சில்) .... | |
| நவதின உற்சவம் .... .... .... | 75 |
| சற்பிரசாத அன்பன் .... .... .... | 30 |
| தரும அப்பம் .... .... .... .... | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் .... .... | 85 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் .... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை (அச்சில்) .... | |
| பத்திமா மாதாவும் செபமாலையும் .... .... | 25 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பத்திமா) .... | 2-50 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் .... | 1-00 |
| ஞானவொடுக்கப் பிரசங்கங்கள் (அச்சில்) .... | |
| திவ்விய பூசை மகத்துவம் .... .... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் .... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) .... .... | 90 |
| ஆண்டவர் சரித்திரம் (Part II) .... .... | 90 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி .... .... | 70 |
| பத்திச் சபைகள் .... .... .... | 20 |
| ஆத்தும தரிசனம் .... .... .... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதக காண்டம் | 2-50 |
| மன்னார் வேதசாட்சிகள் .... .... | 1-00 |
| தமிழரின் பூர்வ சரித்திரம் .... .... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் .... | 35 |
| அர்ச். லூயி மேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் | 40 |
| நானே குற்றவாளி .... .... .... | 1-00 |


—மெச்சிக்கோவில் 1926-ம்ஆண்டின்கலகத்தின்போது பறிக்கப்பட்ட கோவில் ஒன்றை அரசாங்கம் இப்பொழுது கத்தோலிக்கருக்கு திருப்பிக் கொடுக்கப்போகிறார்கள். கத்தோலிக்கருக்கு விரோதமானசட்டங்களை நாட்டின் தலைவர் இப்பொழுது ஒவ்வொன்றாக நீக்கிவருகிறார்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 3 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org